25050

# பூ ஒன்று புயலானது...!

கோவை மாவட்ட நூலக ஆணைக்குழு ★ கோவை மாவட்டம் ★ கிளை நூலகம்

## 1

குளுகுளு ரெஸ்டாரெண்டின் வெளியே மெத்தென்றிருந்த புல்வெளியில் சில நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. அங்கே சிலர் அமர்ந்து தங்களுக்குப் பிடித்தமான பழரசங்களை அருந்திக் கொண்டிருந்தார்கள். சாயங்கால நேர சில்லென்ற காற்றை அனுபவித்தபடி ரமணியும், நந்தினியும் ஒரு தனி இடத்தில் அமர்ந்திருந்தார்கள்.

இன்னும் எத்தனை நாளைக்குதான் இப்படியே இருக்கப் போறே? உனக்கும் வயசாகிட்டு போகுது... ஒரு துணை வேண்டாமா? எப்போ நந்தினி கல்யாணம் பண்ணிக்கப் போறே?''

ரமணி தன் எதிரில் அமர்ந்திருந்த ஆருயிர் தோழி நந்தினியிடம் மிருதுவாய் கேட்டாள்.

''ப்ச், கல்யாணத்திற்கு இப்போ என்ன அவசரம்? அதுவா நடக்கும்போது நடக்கும்!''

ஏனோதானோவென்று பதில் வந்தது நந்தினியிடமிருந்து.

அடக்கம், அமைதி, அன்பான பேச்சு ரமணியின் ஸ்பெஷாலிட்டி! நந்தினி அவளுக்கு நேர் எதிர். தைரியசாலி. தன்னை அலங்கரித்து அழகு பார்ப்பதில் கைதேர்ந்தவள்.

சர்வர் இருவருக்கும் ஐஸ்கிரீமை வைத்து விட்டு நகர்ந்தான். நந்தினி பாதி சுவைத்திருந்த ஐஸ்கிரீமை ரமணி வாங்கிக் கொண்டாள். ரமணியிடமிருந்து நந்தினி வாங்கிக் கொண்டாள். இருவரும் ஐஸ்கிரீமை மாற்றிக் கொண்டு சுவைக்கத் தொடங்கினார்கள்.

ரமணியும், நந்தினியும் கல்லூரி நாட்களிலிருந்தே திக் பிரெண்ட்ஸ். படித்து முடித்த பின் இருவருக்கும் ஒரே அலுவலகத்தில் வேலை கிடைத்தது. இருவரும் பூரித்துப் போயினர். ரமணி சரியான வயதில் திருமணம் செய்து கொண்டு இரண்டு குழந்தைகளுடன் செட்டிலாகி விட, தனி மரமான நந்தினி முக்கால்வாசி ரமணியின் வீடே கதியென்று கிடப்பாள். அனைவரும் ஒரே குடும்பமாய் இருந்தனர். ரமணி நந்தினியை மீண்டும் ஏறிட்டாள்.

''சுரேஷ் உன்னை தீவிரமாய் காதலிக்கிறானே... அவனை ஏன் நீ கல்யாணம் பண்ணிக்கக் கூடாது?''

''அவனை போய் யார் கல்யாணம் பண்ணிப்பா? அவனே சோத்துக்கு 'லாட்டரி' அடிக்கிறான். அவனைக் கல்யாணம் பண்ணிக்கிட்டால் என்னை பிச்சை எடுக்க விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. நம்ம லெவலே வேறு!''

அலட்சியமாய் சொன்ன நந்தினியை ரமணி ஆச்சரிய மாய் பார்த்தாள்.



''என்ன அப்படி பார்க்கிறே? சின்ன வயதிலிருந்தே ரொம்ப கஷ்டப்பட்டாச்சு. கல்யாணத்துக்கு பிறகாவது வசதியா இருக்கணும்னுதான் ஆசை!''

''நந்தினி... இருட்ட ஆரம்பிச்சிடுச்சி. இதுக்கு மேல நீ லேடீஸ் ஹாஸ்டலுக்குப் போறதுக்கு ரொம்ப நேரமா யிடும்... பேசாம என் வீட்டுக்கு வந்திடு!''

''ஏற்கனவே ஹாஸ்டலில் வார்டன் முறைக்குது. இப்படி அடிக்கடி டேரா போட்டால் ஒருநாள் ஹாஸ்டலை விட்டே துரத்திடும்!''

''அதுக்குதான் சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்கோன்னு சொல்றேன்.''

''அடடா... திரும்ப அதே மேட்டரை பேசி எரிச்சல் பண்ணாதே ரமணி. நீ கிளம்பு.. உன் ஆசை கணவர் நீ ஒரு நிமிஷம் லேட்டா போனாக் கூட தவிச்சுடுவார்!''

''நிஜமாத்தான் நந்தினி... ப்ரவீன் என் மேல எவ்வளவு பிரியமாய் இருக்கிறார் தெரியுமா? நான் போன ஜென்மத்தில பண்ணின புண்ணியம் என்று நினைக் கிறேன். நான் அவர் பக்கத்தில் கொஞ்ச நேரம் இல்லையின்னா கூட துடிச்சு போயிடுறார்.'' கணவன் பற்றி பெருமை பொங்க சொன்னாள் ரமணி.

''சரிப்பா நான் கிளம்பறேன்!''

ரமணி எழுந்து நந்தினியின் கன்னத்தில் தன் இதழை பதித்து 'பை' சொல்லி விட்டு கிளம்பினாள்.

நந்தினி உதட்டோரத்தில் நக்கலாய் சிரித்தபடி தன் ஆருயிர் தோழி செல்வதையே பார்த்தாள். இடது கையால் தன் அடி வயிற்றை தடவிப் பார்த்தாள். மனம் சில்லிட்டது.

'சிசு' இந்நேரம் வளர ஆரம்பித்திருக்கும். நான் சாப்பிட்ட வெண்ணிலா ஐஸ்கிரீம் அவனுக்கு ஒத்துக் கொள்ளுமா? யோசனையுடன் இருந்தவளை பின்னாலிருந்து உஷ்ண மான கரம் ஒன்று அவளது கண்ணை பொத்தியது.

''யார்?'' என்று அவளது உதடுகள் முணுமுணுத்தபடி கேட்டன. சிறிய அதிர்வுக்கு பின் நந்தினி உற்சாகமாய் கத்தினாள். ''ப்ரவீன்''

ஆறடி உயரத்தில் ஒயிட்மெட்டல் ப்ரேம் கண்ணாடி அணிந்து, காற்றில் அலைபாய்ந்த கேசத்தை கோதியபடி கம்பீரமாக நின்று கொண்டிருந்தான் ப்ரவீன்.

''ப்ரவீன், என்ன விளையாட்டு இது?'' நந்தினி சிணுங்கியபடி கேட்டாள்.

நந்தினியின் அருகில் சேரை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தான் ப்ரவீன். வாங்கி வந்திருந்த ஃப்ரூட்ஸை அவளிடம் கொடுத்தான்.

''நல்லா சாப்பிடு நந்தினி. அப்போதுதான் நம்ம குழந்தை ஆரோக்கியமாக வளரும்!''

நந்தினி ப்ரவீனைப் பார்த்து சந்தோஷமாய்ப் புன்னகைத்தாள். அவனது கையை எடுத்து தன் கன்னத்தில் பதித்துக் கொண்டாள்.



''இன்னும் எத்தனை நாட்களுக்கு இந்த மறைந்த வாழ்க்கை ப்ரவீன்? ஊரறிய எப்போ என் கழுத்தில் 'தாலி' கட்டப் போறீங்க?''

''மெதுவா பேசு நந்தினி... யாராவது கேட்கப் போறாங்க!''

''என்னிக்காவது ஒரு நாள் எல்லோருக்கும் தெரியப் போகுது.. அது இன்னிக்கு தெரிந்தால் என்னவாம். நான் ஹாஸ்டலுக்குப் போகலை ப்ரவீன்.. ரூம் எடுத்து தங்குவோமா?''

''வேண்டாம் நந்தினி, இப்பெல்லாம் கொஞ்சம் லேட்டா போனா கூட ரமணி கேள்வியா கேட்டு துளைக்கிறா. இன்னொரு நாள் ரூம் போட்டுக்கலாம். நான் கிளம்ப றேன்டா!''

நந்தினி யோசித்தாள்.

''நான் ஹாஸ்டலுக்குப் போகலை. உங்க வீட்டுக்கே வந்துடறேன்!''

''சரி வா!'' என்றான்.

ப்ரவீனின் பல்சரில் குஷியாய் தொத்திக் கொண்டாள் நந்தினி.

★ ★ ★

ரமணி ஸ்கூட்டியை போர்டிகோவில் நிறுத்தி விட்டு சாவியை சுழற்றியபடி வீட்டுக்குள் நுழைந்தாள். சீனுவும், ஸ்வேதாவும் அவளைக் கண்டதும் 'ஹாய் மம்மி!' என்று துள்ளிக் குதித்து அவளது காலை குஷியாய் கட்டிக் கொண்டார்கள்.

''என்னடா செல்லங்களா, அம்மா எப்போ வருவேன்னு காத்துக்கிட்டிருந்தீங்களா?'' என்றபடி சீனுவைத் தூக்கி முத்தமிட்டாள்.

''அம்மா.. அம்மா.. என்னையும் தூக்குங்கம்மா'' ஸ்வேதா ஆசையாய் கெஞ்சினாள்.

''உனக்கு ஏழு வயசாகுது... உன்னை எப்படிடா தூக்கறது? சீனு சின்னப் பையன்... அவனை ஈஸியா தூக்கிடலாம்!''

''அப்படியெல்லாம் ஒண்ணும் கிடையாது. என்னையும் ஈஸியா தூக்கலாம்.. தூக்கிப் பார்த்தாத்தானே தெரியும்!''

''அதுக்கென்ன உன்னையும் தூக்கிட்டாப் போச்சு!''

சீனுவை இறக்கி விட்டுவிட்டு ஸ்வேதாவை தூக்கினாள் ரமணி. ஸ்வேதா வேண்டுமென்றே சீனு மாதிரி கை கால்களை உதைக்க, இதை சற்றும் எதிர்பாராத ரமணி நிலை தடுமாறி ஸ்வேதாவுடன் சேர்ந்து கீழே விழுந்தாள். சீனு அவர்களைப் பார்த்து கைகொட்டி சிரித்தான். பின் அவனும் அவர்கள் மேல் தொப்பென்று விழுந்து புரளத் துவங்கினான். வீடே களேபரமாக ஆனது. ரமணியும் குழந்தையாக மாறி அவர்களுடன் சேர்ந்து கொஞ்ச நேரம் உருண்டு புரண்டு விளையாடினாள்.

''இந்தாம்மா காபி.''

குரல் கேட்டு ரமணி திரும்பிப் பார்த்தாள். மாமியார் கமலம் நின்று கொண்டிருந்தாள்.



''அத்தே நீங்க காபி கொண்டு வந்திருக்கீங்க.. சமையல்காரம்மா எங்கே?''

''அவ குழந்தைக்கு உடம்புக்கு முடியலையாம்.. லீவு வேணும்னு கேட்டா சரி போயிட்டுவானு அனுப்பிட்டேன்!''

''அப்போ இன்னிக்கு ராத்திரி நான்தான் சமைக்கணுமா?''

ரமணி எழுந்து புடவையை உதறி சரி செய்தாள். மாமியார் கொடுத்த காபியை வாங்கிக் கொண்டு சோபாவில் சாய்ந்து காபியை உறிஞ்சத் தொடங்கினாள்.

''அத்தை ரொம்ப நாளைக்கப்புறம் உங்கக் காபியை குடிக்கிறேன்... காபி பிரமாதம்!''

கமலம் உதடு பிரியாமல் சிரித்துக் கொண்டாள். பின் அவளை குழப்பமாகப் பார்த்தாள்.

''என்ன அத்தை அப்படி பார்க்கிறீங்க?''

''ஏம்மா காலையில் ஆபீஸ் கிளம்பும் போது வேற புடவையை தானே கட்டிக்கிட்டுப் போயிருந்தே. இப்போ வேற புடவையில் வந்திருக்கே?''

ரமணி குதூகலமாய் சிரித்தபடி சொன்னாள்.

''அத்தை இது நந்தினியோட புடவை.. என்னோட புடவையை அவ கட்டிக்கிட்டு போயிருக்கா. மார்னிங் ஆபீஸ் போனதும் இரண்டு பேரும் பாத்ரூமில் வெச்சு புடவையை மாத்திக்கிட்டோம்!''

கமலத்திற்கு இது பிடிக்கவில்லை. மௌனமாய் இருந்தாள்.

''என்ன அத்தை பேச்சே காணோம்?''

''என்னம்மா பழக்கம் இது. மாத்திக்கிறது.. ப்ரெண்ட்ஷிப் இருக்க வேண்டியதுதான்.. கல்யாணத்துக்குப் பிறகு குடும்பம், குழந்தை குட்டினு ஆன பிறகு ஓரளவுக்குத்தான் பழகணும்!''

கமலம் சொல்லிக் கொண்டிருக்கும் போதே வெளியே பல்சரின் ஹாரன் சத்தம் கேட்டது. ரமணி எழப் போனாள்.

''நீ காபியைக் குடி, நான் போய் கதவைத் திறக்கிறேன்!''

கமலம் போய் கதவைத் திறந்தாள். கண்முன் கண்ட காட்சியைப் பார்த்து அதிர்ந்து போனாள். நந்தினி ப்ரவீன் வயிற்றில் கையை போட்டபடி வண்டியில் உட்கார்ந் திருந்தாள். கமலத்தைப் பார்த்ததும் வேகமாய் விலகி வண்டியில் இருந்து இறங்கிக் கொண்டாள். அசடு வழிய ''வணக்கம்மா'' என்று கூறிவிட்டு பூனை நடை போட்டு உள்ளே போனாள்.

நந்தினியைக் கண்டதும் ஸ்வேதாவும் சீனுவும் 'ஹாய் நந்தினி ஆன்ட்டி' என்று கோரஸாய் கத்தியவாறு ஓடி வந்து அவளது காலைக் கட்டிக் கொண்டனர். நந்தினி இருவரையும் அணைத்துக் கொண்டாள். ரமணி அவளை ஆச்சரியம் கலந்த வியப்புடன் பார்த்தாள்.

''ஹாய் நந்தினி வாட் எ சர்ப்ரைஸ்.. நான் கூப்பிட்டப்ப வரலை. இப்ப எப்படியாம்?''



''பஸ்சுக்காகக் காத்துக்கிட்டிருந்தாங்க.. நான்தான் கூப்பிட்டேன். இருட்ட ஆரம்பிச்சிடுச்சு. பேசாம எங்க வீட்டுக்கு வந்துடுங்கன்னு அழைச்சிட்டு வந்தேன்'' என்றான் ப்ரவின்.

ப்ரவீன் வாயிலிருந்து பொய் சரளமாய் புரண்டு வந்தது. நந்தினி ரமணியின் தோளில் சாய்ந்துக் கொண்டு சிணுங்கியபடி சொன்னாள்.

''பசிக்குதுடி.''

''இதோ அரை மணி நேரத்தில் சமையலை முடிச்சு எல்லோருக்கும் சாப்பாடு போட்டுடறேன்.''

ரமணி புடவையிலிருந்து நைட்டிக்கு மாறி சமையற் கட்டினுள் புகுந்தாள். பம்பரமாய் சுழன்று சுடச்சுட சாதம், சாம்பார் ரசம், கோஸ் பொரியல், அப்பளம் என செய்து முடித்தாள்.

''என்னம்மா சமையல் ஆச்சா?'' கேட்டபடி கமலம் உள்ளே வந்தாள்.

''ஆங் அத்தை இதைக் கொண்டு போய் டைனிங் டேபிள்ல வையுங்க..'' என்று நிமிர்ந்தவள்,

''என்ன அத்தை என்னையே பார்க்கிறீங்க?''

கமலம் கவலை கலந்த முகத்துடன் சொன்னாள். ''ஒரே குழப்பமா இருக்கு ரமணி. நீ வேலைக்குப் போற பொண்ணு.. எப்பவும் இயந்திரமாய் செயல்பட்டுக்கிட்டி ருக்கே.. அதனால உன்னைச் சுத்தி என்ன நடக்குதுன்னு உனக்குத் தெரியலை. உன்னை பயன்படுத்திஉன்னை

சுற்றி இருக்கிறவங்க உன்னை ஏமாத்தப் பார்க்கிறாங் கம்மா!''

ரமணி சலிப்புடன் கேட்டாள்.

''நீங்க பேசறது எனக்கு ஒண்ணும் புரியலை அத்தை!''

''சரி நான் நேரடியாகவே கேட்கிறேன். ப்ரவீனும் நந்தினியும் உன் கண் முன்னாடி சிரிச்சி பேசி அரட்டை அடிக்கிறதும், சந்தர்ப்பம் பார்த்து வண்டியில் ஒண்ணா போவதும் உனக்குத் தப்பாப் படலை?''

''இதுல என்ன தப்பு இருக்கு.. என் தோழி தானே அவருடன் பழகுகிறாள்., வேற எவளாவது இதுமாதிரி நடந்துக்கிட்டால் கொலை விழும். அத்தே நான் ஒண்ணு சொன்னாக் கோவிச்சிக்க மாட்டீங்களே? உங்க பையனை விட என் தோழி தான் எனக்கு ரொம்பப் பிடிக்கும். அவளை பார்த்தவுடனே மனசு லேசாகி சந்தோஷ பூ பூக்குது. என் குழந்தைகளும் அவளிடம் நல்லாவே ஒட்டிக்கிட்டாங்க. ப்ரவீன் கூட நந்தினியை உரிமையாய் பழக விட்டிருக் கிறேன் என்றால் அந்தளவுக்கு நந்தினி நம்பிக்கை யானவள்... அன்பானவள்.''

ரமணி சொன்னதைக் கேட்டு கமலம் நக்கலாய் நகைத்தாள். பிறகு சொன்னாள். ''நீயும் நந்தினியும் உடைகளை ஒருவருக்கொருவர் மாத்திக்கிறீங்க. என்னிக்கு அவ உன் புருஷனை உபயோகப்படுத்திக்கப் போறாளோ? கணவனை ரொம்பவும் ஃப்ரீயாக விட்டா ஆபத்தில் தான் போய் முடியும்.. பஞ்சும் நெருப்பும் எந்த நேரத்திலும் பற்றிக் கொள்ளும். உன் வாழ்க்கை உன் கையில்தான்



இருக்கு. ஒரு தடவை தொலைச்சேனா பிறகு கஷ்டப்பட்டு ஒரு பிரயோஜனமும் இல்லை. சொல்லிட்டேன்.''

ரமணி பேசவில்லை. பின் சாம்பாரையும், அப்பளத் தையும் எடுத்துக் கொண்டு டைனிங் டேபிளில் வைப்பதற்குச் சென்றாள். பக்கவாட்டில் ஹாலிலிருந்து சிரிப்பொலி சத்தம் கேட்டது. எட்டிப் பார்த்தாள். ப்ரவீனும் நந்தினியும் சிறிய இடைவெளி விட்டமர்ந்து சிரித்து பேசிக் கொண்டிருந்தார்கள். ரமணிக்கு கமலம் சொன்னது நினைவுக்கு வந்தது.

''இரண்டு பேரும் சிரிச்சுப் பேசி அரட்டை அடிக்கிறாங் களே. உனக்குத் தப்பாப் படலை.''

ரமணி 'ப்ச்' கொட்டிக் கொண்டாள். என் கண் முன்னாடி தானே சிரிச்சு பேசிக்கிறாங்க. ஸோ வாட்? நந்தினியின் சினேகம் ப்ரவீனுக்குப் பிடித்திருக்கலாம். ப்ரவீனோட நண்பர்கள் வீட்டுக்கு வந்தால் நான் அவர்களுடன் அரட்டை அடிப்பதில்லையா? ப்ரவீனைப் பார்த்தால் இரண்டு குழந்தைகளுக்கு தந்தை என்று யார் ஒப்புக் கொள்வார்கள். அவனது கம்பீரமும், ரசனையான பேச்சும், நந்தினியைக் கவர்ந்திருக்கலாம். நட்பு கொள்ள ஏதேனும் ஒரு பிடித்த விஷயம் இருக்க வேண்டும். ப்ரவீன் பிற பெண்களை நாடுகிறவன் என்று நினைப்பதும், சந்தேகிப் பதும் எனக்கு பெருமை சேர்க்கிற விஷயமா?

ரமணி தலையை உதறிக் கொண்டாள். இதில் கலவரப்பட எதுவும் இல்லை என்றே அவள் மனதிற்குப் பட்டது. பழையபடி உதட்டில் வசீகர புன்னகையை ஒட்டிக் கொண்டு ''எல்லோரும் சாப்பிட வாங்க'' என்றாள்.

ஸ்வேதாவும், சீனுவும் நாற்காலியில் முதலில் உட்கார வேண்டுமென்று போட்டி போட்டுக் கொண்டு ஓடி வந்தார்கள். ஸ்வேதா தான் முதலில் வந்து அமர்ந்தாள். சீனுவிடம் ''நான்தான் பர்ஸ்ட்'' என்று கேலி செய்தாள்.

''ஒண்ணும் கிடையாது. நான் தான் பர்ஸ்ட்'' என்றான் அவன்.

''சாப்பிடும் பொழுது யாரும் பேசக் கூடாது'' என்று கட்டளை போட்டபடி.. ப்ரவீன் வந்து அமர்ந்தான். அனைவரும் டைனிங் டேபிளில் ஆஜர். நந்தினி மட்டும் உட்காரவில்லை.

''நந்தினி நீயும் உட்காரு!'' என்றாள் ரமணி.

''இல்ல ரமணி... நாம இரண்டு பேரும் ஒண்ணா சாப்பிடுவோம். சாதத்தை குடு நான் பரிமாறுகிறேன்!''

''முதலில் ப்ரவீனுக்கு எடுத்து வை. நான் எல்லோருக்கும் டம்ளரில் தண்ணீர் ஊத்தறேன்.''

நந்தினி பூரிப்புடன் ரமணியிடமிருந்து ஹாட்பேக்கை வாங்கி ப்ரவீனுக்கு ஆவி பறக்கும் சாதத்தை வைத்துப் பரிமாறத் தொடங்கினாள். அப்படியே திருட்டுத்தனமாய் ப்ரவீனை பார்த்து கண்ணடித்தாள். ப்ரவீன் உள்ளுக்குள் குஷியாய் நகைத்தபடி நந்தினி பரிமாறியதை ஆசையுடன் சாப்பிடத் தொடங்கினான்.

தோட்டத்தில் பூனை குழந்தையைப் போல் அழும் குரல் கேட்டது. கமலத்திற்கு தேகமெங்கும் பயம் பரவியது. கவலையாய் சாதத்தை பிசைந்தாள். இந்த கூத்து எங்கே போய் முடியப் போகிறதோ ஈஸ்வரா?



## 2

ரமணி, நந்தினி இருவரும் ஒன்றாகப் பரீட்சை எழுதினாலும் அதில் வெற்றி பெற்றது ரமணிதான். எனவே அலுவலகத்தில் அவளுக்கு சீனியர் போஸ்ட். இதனால் பொறாமை கொண்ட நந்தினி, 'ரமணியின் கணவர் ப்ரவீனை தன் பக்கம் இழுத்து அவளை வீழ்த்த வேண்டும்' என்று செயல்பட்டாள். இது ரமணிக்குத் தெரியாது.

அலுவலகத்தில் வேலையில் இருந்த அவள், கண்ணாடி கேபின் வழியாக நந்தினியை யதேச்சையாகப் பார்த்தாள். அவள் எதற்கோ தயாராவதைக் கண்ட ரமணி 'என்ன?' என்று கண்களால் கேட்டாள்.

''நான் கிளம்புகிறேன்'' என்று நந்தினி சைகை காட்டினாள். பதிலுக்கு ரமணி 'ஒரு நிமிடம் உள்ளே வரச் சொல்லி சைகை காட்டினாள். எரிச்சலுடன் எழுந்து போனாள்.

''என்ன ரமணி?''

''கொஞ்சம் குனி!''

நந்தினி குனிந்தாள்.

''உன்னுடைய ஸ்டிக்கர் டிசைன் ரொம்ப நல்லாயிருக்கு!'' என்று அவள் நெற்றியிலிருந்த பொட்டை எடுத்துக் கொண்டு பதிலுக்கு தன் நெற்றியில் இருந்த ஸ்டிக்கரை அவளது நெற்றியில் ஒட்டி விட்டாள்.

''போதுமா? இப்போ நான் கிளம்பலாமா?'' என்று கேட்டாள் நந்தினி.

''ஏன் இவ்வளவு சீக்கிரம் கிளம்பிட்டே?''

''மயக்கமா வாந்தி வர்ற மாதிரி இருக்கு.. சீக்கிரம் ஹாஸ்டலுக்கு போனால் ரெஸ்ட் எடுப்பேன்.''

''என்னது வாந்தி? மயக்கமா?''

''ஒ.. ஒண்ணுமில்லை.. மதியம் சரியாக சாப்பிடலை.. அதனாலிருக்கும்.''

''டாக்டரிடம் போகலாமா?''

''வேண்டாம், வேண்டாம் நான் பார்த்துக்கிறேன். பை.. ரமணி.''

அவள் கிளம்பியவுடன் நந்தினியின் ஸ்டிக்கர் பொட்டை ஆசையாக தன் நெற்றியில் ஒட்டிக் கொண்டாள் ரமணி. சமையல்காரி வராததால் சீக்கிரம் வேலைகளை முடிச்சிட்டு வீட்டுக்கு கிளம்பணும் என்று நினைத்தபடி வேலையில் மும்முரமாக மூழ்கினாள்.

★ ★ ★

நந்தினி பஸ் ஸ்டாப்பில் புழுக்கத்துடன் காத்திருந்தாள். ''சே, ஒரு பஸ்ஸைக் கூட காணோமே. இந்த ப்ரவீன் தினமும் வந்து என்னை பைக்கில் ஹாஸ்டலில் டிராப் பண்ணலாம்ல. காரியம் ஆக வேண்டுமானால் கூப்பிடாமலே வருவார். இனிமேல் தினமும் என்னை டிராப் பண்ண வரச் சொல்ல வேண்டும்.''

''ஹாய்.. நந்தினி.''



நந்தினியின் முதுகுப் புறத்திலிருந்து குரல் வந்தது. ப்ரவீனாக இருக்கும் என்ற ஆசையுடன் திரும்பியவள் அவனைக் கண்டதும் வெறுப்புடன் முகத்தை வெடுக்கென திருப்பிக் கொண்டாள்.

சுரேஷ் நின்று கொண்டிருந்தான். சுரேஷ் அழகிய இளைஞன். நந்தினியின் அழகில் மயங்கி அவளது கடைக்கண் பார்வைக்காக ஏங்கி எந்நேரமும் அவள் பின்னாடியே சுற்றிக் கொண்டிருப்பவன்.

''நந்தினி, நான் உன்னைக் காதலிக்கிறேன் என்று நூறு முறையாவது சொல்லியிருப்பேன். என்னை ஏன் உனக்குப் பிடிக்கலை?''

நந்தினி அவனை சட்டை செய்யாமல் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள். சுரேஷ் மீண்டும் கேட்டான்.

''என்னை ஏன் நந்தினி உனக்குப் பிடிக்கலை? என்னிடம் என்ன இல்லை?''

நந்தினி அவனைப் பார்த்து ''இல்லை... வசதி இல்லை. உத்தியோகம இல்லை. புருஷ லட்சணம் இல்லை. என்னை விட அதிகமாக சம்பளம் வாங்கும்போது சொல்லு, அப்போ பார்க்கலாம்.''

''இதெல்லாம் ஒரு காரணமா?''

''பின்னே வேற என்ன காரணம்?''

''நீ வேற யாரையோ காதலிக்கிறே?''

நந்தினி அவனைப் பார்த்து ஆவேசத்துடன் சொன்னாள்.

''ஆமா.. நான் வேறொருத்தரைத்தான் காதலிக்கிறேன். அதுக்கென்ன இப்போ?''

''யாரு ப்ரவீனையா?''

நந்தினி திடுக்கிட்டு போய் அவனைப் பார்த்தாள்.

''தோழியோட கணவனை காதலிப்பது, தோழிக்கு செய்யிற துரோகம்.. பாவம்!''

''யூ ஸ்டுப்பிட்! நான் யாரை காதலித்தால் உனக்கென்ன? கெட்லாஸ்ட்!'' எனக் கத்தினாள்.

சுரேஷ் நகர்ந்து போய் விட்டான்.

நந்தினிக்கு கோப கோபமாய் வந்தது. சே, பஸ்சை வேற இன்னும் காணோம். இந்த லூஸு வேற வந்து குழப்பிட்டு போயிருக்கு.

நந்தினிக்கு தலை 'விண்ணென்று' வலித்தது. சிறிது நேரத்திலேயே ப்ரவீன் அங்கு வந்தான்.

அவளை இடித்தவாறு வந்து பல்சரை நிறுத்தினான். அவனை கண்டதும், 'ஹாய் ப்ரவீன்' என்று உற்சாகமாய் கூவினாள் நந்தினி.

''ஹாய்.. டார்லிங் அதெப்படி என்னைப் பார்த்த வுடனேயே உன் முகம் பிரகாசமாயிடுது.''

''தெரிஞ்சுக்கோங்க.. ஆனா உங்களுக்குத்தான் என் மேல பிரியமே கிடையாது. எப்பவாவதுதான் என்னைப் பார்க்க வர்றீங்க?''



''அப்படியெல்லாம் ஒண்ணும் கிடையாது. தினமும் தான் செல்போனில் மணிக் கணக்காக பேசிக்கிறோமே, அதுபோதாதா?''

'ப்ரவீன் தலைவலிக்குது. வாங்களேன் பக்கத்திலிருக்கிற கோயிலுக்குப் போயிட்டு வரலாம்!''

''டன்!''

கோயிலில் கூட்டம் அவ்வளவாக இல்லை. ஆனால் ப்ரவீனின் மனம் திக் திக்கென்று அடித்துக் கொண்டது. தன்னை யாராவது கவனிக்கிறார்களா? என்று சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டே வந்தான்.

''நீங்க திருட்டு முழி முழிச்சுகிட்டு வந்தால் எல்லோரும் சந்தேகப்படத்தான் செய்வாங்க. சாதாரணமா வாங்க.''

ப்ரவீன் அர்ச்சனை கூடையை ஐயரிடம் நீட்டினான்.

''யார் பேருக்கு அர்ச்சனை பண்ணனும்?'' கேட்டார் குருக்கள்.

''சாமி பெயருக்கே பண்ணுங்க'' என்றான் ப்ரவீன்.

நந்தினி உடனே குறுக்கிட்டு, ''நம்ம பெயருக்கே பண்ணலாம் ப்ரவீன்'' என்றாள்.

''சரி'' என்ற ப்ரவீன் குருக்களிடம்அவன் பெயரையும் ராசியையும் சொன்னான்.

''உங்க மனைவியின் பெயரை சொல்லுங்கோ'' என்று குருக்கள் கேட்டார்.

ப்ரவீன் 'ரமணி' என்று கூறி விட நந்தினி சட்டென்று நிமிர்ந்து அவனைப் பார்த்து முறைத்தாள்.

''ஸ..ஸாரி... ந.. நந்தினி'' என்று தடுமாறினான்.

''ரமணின்னு சொன்னீங்களே தம்பி!''

''ஆ..ஆமா.. வீட்ல ரமணி வெளியே நந்தினி.''

ப்ரவீனுக்கு வியர்த்து வழிந்தது.

''உங்க ஜோடிப் பொருத்தம் ரொம்ப நன்னாயிருக்கு தீர்க்க சுமங்கலி பவ!''

நந்தினி உடனே வெட்கத்துடன் தலையைக் குனிந்து கொண்டாள். குருக்களிடம் விபூதி குங்குமத்தை பெற்றுக் கொண்டு யார் கண்ணிலும் படாதவாறு ஒரு ஓரமாக அமர்ந்து கொண்டார்கள். நந்தினி சொன்னாள்.

''ப்ரவீன், இந்தக் குங்குமத்தை என் நெற்றியில் வெச்சு விடுங்க!''

ப்ரவீன் அவளைக் கூர்ந்து பார்த்தான்.

''என்ன பார்க்கறீங்க? தாலியைத்தான் கட்ட மாட்டேன் றீங்க.. மறுக்கறீங்க! அட்லீஸ்ட் இந்தக் குங்குமத்தையாவது வெச்சு உங்க மனைவிங்கிற ஸ்தானத்தை கொடுங்க!''

ப்ரவீன் தன் ஆட்காட்டி விரலால் குங்குமத்தை தொட்டு அவளது நெற்றியில் வைத்து விட்டான். நந்தினி பூரித்துப் போனாள். உடலில் புதிய உணர்வு ஓடியது. புத்துணர்ச்சி யாய் இருந்தது. இனி மேல் ப்ரவீன் தான் தனக்கு உலகம்



என்ற பேரானந்தத்தில் அவனது தோளில் சாய்ந்துக் கொண்டாள்.

''ஏய், இது கோயில் யாராவது பார்த்துட போறாங்க.. எந்திரி. கிளம்பலாம்!'' என்றான்.

''ம்!''

இருவரும் கோயிலை விட்டு வெளியே வந்து தங்களது காலணிகளை அணிந்துக் கொண்டு கிளம்பினார்கள்.

அப்போது கோயிலுக்கு வந்திருந்த கமலம் நவக்கிர கத்தைச் சுற்றிக் கொண்டிருந்தாள். ஒன்பது சுற்று சுற்றி முடித்தவுடன் குருக்களிடம் வந்து அர்ச்சனை கூடையை கொடுத்தாள். கூடையை கொடுக்கும்போது இயல்பாய் திரும்பியவள், காலணிகளை அணிந்து கொண்டிருந்த ப்ரவீனின் முதுகுப் புறத்தைக் கவனித்து விட்டாள். ப்ரவீனைச் சுற்றி நான்கைந்து பேர் அந்த இடத்தில் இருந்ததால் ப்ரவீன் மட்டும் துல்லியமாய் அவளுக்குத் தெரிந்தான். நந்தினி சுத்தமாய்த் தெரியவில்லை.

''ப்ரவீன், டேய் ப்ரவீன்!'' என உரக்கக் கத்திக் கூப்பிட் டாள். கமலத்தின் குரல் ப்ரவீனுக்குக் கேட்கவில்லை.

''அம்மா இது கோயில். இவ்வளவு சத்தமாக பேசக் கூடாது'' என்று குருக்கள் மிருதுவாய் சொல்லிவிட்டு யாரை கூப்பிடுகிறார் என்று திரும்பிப் பார்த்தார்.

''அந்த நீலக்கலர் சட்டை அணிந்தவரையா கூப்பிடு றீங்க?'' என்று கேட்டார்.

''ஆமா குருக்கள், அவன்தான் என் பையன்..''

''ப்ரவீன்தானே அவருடைய பெயர்!''

''அடடே உங்களுக்கு எப்படி தெரியும்?''

''அவரும், அவங்க மனைவியும் வந்தாங்க. அவங்க பெயருக்கு அர்ச்சனை பண்ணிட்டு இப்பதான் கிளம்ப றாங்க. ஜோடிப் பொருத்தம் அமோகமா இருக்கு.''

''மனைவியா?'' கமலம் யோசனையுடன் கையில் கட்டியிருந்த வாட்சைப் பார்த்தாள். ரமணி இவ்வளவு சீக்கிரம் அலுவலகத்திலிருந்து வந்துட்டாளா? இருக்காதே.. குழம்பினாள்.

சட்டென சவுக்கால் அடிபட்டவள் போல் உணர்ந்தாள். பதற்றத்துடன் குருக்களிடம் விசாரித்தாள்.

''அவன் மனைவி பெயர் என்னவென்றுசொன்னான்?''

''என்னம்மா நீங்க.. உங்க பையன்னு சொல்றீங்க.. உங்க மருமகள் பெயர் உங்களுக்குத் தெரியாதா?''

''அ.. அதில்லை.. அவ ராசிக்கு பொருத்தமான பெயரா என்று தெரிஞ்சுக்கத்தான் கேட்கிறேன்!'' சமாளித்தாள்.

''உங்க மருமக என்ன ராசி?''

''கன்னி ராசி.''

''நல்ல ராசிதான். அவங்க பேர் வாணியோ, ராணியோனு சொன்னாங்களே!''

கமலம் படபடப்புடன் கேட்டாள்.

''வந்தது ரமணியா? நந்தினியா?''



குருக்கள் குழம்பிப் போனார்.

''ரமணி என்றுதான் சொன்னார். இ.. இல்லையில்லை நந்தினினு சொன்னாரே.''

''என்ன குருக்கள் குழப்பறீங்க? வந்தது ரமணியா? இல்லை நந்தினியா?''

குருக்கள் சில நொடிகள் செலவழித்து பின் ஞாபகப் படுத்தி சொன்னார்.

''ஆங்.. ஞாபகம் வந்துடுச்சு. வீட்டுல அவங்க பேர் ரமணியாம். வெளியே நந்தினியாம்! உங்க பையன் அந்தம்மாவுக்கு குங்குமம் வெச்சு விட்டார், சேமமா யிருந்தது!''

கமலம் அதிர்ந்து போனாள். ''அடப்பாவிங்களா.. ரமணிக்கே இரண்டு பேரும் துரோகம் பண்றீங்களா.. நந்தினியை வீட்டுக்குள் சேர்க்காதேனு எத்தனை தடவை படிச்சு படிச்சு ரமணியிடம் சொல்லியிருப்பேன்... கேட்டாளா? இப்போ இரண்டு பேருக்கும் உள்ள தப்பான உறவை அவள் எப்படி தாங்கிப்பாள். ஐயோ! ரமணி மோசம் போயிட்டியேம்மா.. நான் என்ன செய்வேன்? என் பையனை அடிச்சு திருத்துற வயசா? ஐயோ! கடவுளே என்னிக்கு பூகம்பம் பெரிசா வெடிக்கப் போகுதே?''

தளர்ந்த மனதுடன் வீட்டை நோக்கி நடக்கலானாள்.

வீடு வந்ததும் கமலம் செருப்பை கழற்றி விட்டு உள்ளே நுழைந்தாள்.

''என்னம்மா கோயிலில் சாமிங்க உங்களை பிடிச்சு வெச்சிக்கிட்டாங்களா?''

ப்ரவீன் தன் அம்மாவை பார்த்துக் கேட்டான். கமலம் பதில் ஏதும் சொல்லாமல், ரமணியிடம் சென்று விபூதி, குங்குமத்தை நெற்றியில் வைத்து விட்டாள். ப்ரவீன் கேட்டான்.

''ஏம்மா லேட்?''

கமலம் அவன் கேள்விக்குச் செவி சாய்க்காமல் அவள் அறைக்குச் சென்று விட்டாள். ப்ரவீனுக்கு முகத்தில் அடித்தாற் போலிருந்தது. விருட்டென்று எழுந்து அவள் அறைக்குள் போனான். ரமணியும் பின் தொடர்ந்தாள்.

''ஏம்மா நான் கேட்டுக்கிட்டிருக்கேன். நீங்க பதில் சொல்லாம உள்ளே வந்து புகுந்துக்கிட்டா என்ன அர்த்தம்?''

கமலம் அவனை சட்டை செய்யாமல் எங்கோ வெறித்தபடி உட்கார்ந்திருந்தாள்.

''அம்மா.. நான் உங்ககிட்டே தான் பேசிக்கிட்டிருக்கேன். ஏன் என்கிட்டே பேச மாட்டேங்கறீங்க?''

கமலம் தொடர்ந்து மௌனமாகவே இருந்தாள். ரமணி தயங்கித் தயங்கி வாயைத் திறந்தாள்.

''அத்தை என் மேல ஏதாவது கோபமா? சாப்பிட வாங்க அத்தை!''

''இல்லம்மா எனக்குப் பசிக்கலை... கோயிலில் பிரசாதம் கொடுத்தாங்க சாப்பிட்டேம்மா!''



ரமணிக்கு கமலம் தன்னிடம் பேசியது நிம்மதியாய் இருந்தது. நல்லவேளை அத்தைக்கு என் மேல் எந்தக் கோபமும் இல்லை. ப்ரவீன் மேல் என்ன கோபமாக இருக்கும்.

ப்ரவீன் கமலத்தையே ஒரு நொடி பார்ததான். இதற்கு மேல் அந்த இடத்தில் இருந்தால் தனக்கு மரியாதை இல்லை என்று எண்ணி அறையை விட்டு வெளியேறி னான்.

ரமணி குழம்பினாள். ''அம்மா பிள்ளைக்குள் என்னவாக சண்டை இருக்கும்? காலையில் அத்தையிடமே கேட்டுக்க லாம்''என்று நினைத்துக் கொண்டாள்.

''ரமணி!''

''என்னங்க?''

''இன்னிக்கு நான் போட்டிருந்த ஷர்ட்டை துவைச்சு அயர்ன் பண்ணி வைச்சுடு. இரண்டு நாள்ல ஆபீஸில் ஒரு மீட்டிங் இருக்கு. அன்னிக்கு இந்த ஷர்ட்டைத்தான் போட்டுக்கிட்டுப் போகணும்.''

''சரிங்க!''

''எனக்கு பால் வேண்டாம், நான் தூங்கப் போறேன்!''

''சரி.''

வீட்டில் இறுக்கமான சூழ்நிலை உலவுவதை ரமணி உணர்ந்தாள். காலையில் எல்லாம் சரியாகிவிடும் என்று நினைத்துக் கொண்டாள்.

‘முதலில் ப்ரவீன் ஷர்ட்டை இப்பவே வாஷிங் மெஷினில் போட்டுட்டுத்தான் போய் படுக்கணும். காலையில் இருக்கும் பரபரப்பில் மறந்து விடுவோம்’ என்று நினைத்தவாறு பெட்ரூமிற்குச் சென்றாள். ப்ரவீன் அதற்குள் தூங்கி விட்டிருந்தான். ஹாங்கரில் தொங்கிக் கொண்டிருந்த அவனது ஷர்ட்டை எடுத்து வந்து வாஷிங் மெஷினில் போட்டாள். மின்சாரம் தாக்கியது போல சட்டென்று நின்றாள். வேக வேகமாய் வாஷிங் மெஷினின் டோரை திறந்து ப்ரவீன் ஷர்ட்டை வெளியே எடுத்து பார்த்தாள். ஷர்ட்டின் கை பகுதியில் ஸ்டிக்கர் பொட்டு ஒட்டியிருந்தது.

மனதெல்லாம் படபடவென்று அடித்துக் கொண்டது. நடுங்கும் கைகளால் அந்த ஸ்டிக்கர் பொட்டை எடுத்துப் பார்த்தாள்.

இது என்னுடைய ஸ்டிக்கர் பொட்டுதானே.. ஆபீஸில் நந்தினிக்கு வைத்து விட்டதுதானே. நந்தினியிடமிருந்து இந்த பொட்டு எப்படி ப்ரவீன் ஷர்ட்டில்? இரண்டு பேரும் வெளியே எங்காவது சந்தித்துப் பேசியிருக்கலாம். அவள் பொட்டு ப்ரவீன் ஷர்ட்டில் ஒட்டுமளவுக்கு நெருக்கமாக இருந்திருக்கிறார்களா? ரமணியின் நெஞ்சில் இடி இறங்கியது. அப்படியே சரிந்து உட்கார்ந்தாள்.

அறையில் கமலம் தூக்கம் வராமல் புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தாள். ‘காலையில் சஜகமாக இருக்கணும். இல்லையென்றால் ரமணி என்ன விஷயமென்று கேட்பாள். சமயம் வரும்பொழுது ரமணியை



உட்கார வைத்து பக்குவமாக பேசணும்’ என்று நினைத்துக் கொண்டாள்.

## 3

வழக்கம் போல் பொழுது இனிதாகவே விடிந்தது. ஆனால் அந்த வீட்டில் மயான அமைதி நிலவியது. ரமணியின் இதயம் கனத்தது.

நெருங்கிய தோழி என்பதால் தானே ப்ரவீனுடன் நந்தினியை பழக விட்டிருந்தோம். நந்தினி தப்பு செய்வாளா? இந்த விஷயத்தைப் பற்றி எப்படி நேரடியாக கேட்பது? அவர்களுக்குள் தப்பான உறவு இல்லை என்றால், என் மேல் சந்தேகப்படுறீயா? என்று தாம் தூம் என்று குதிப்பானே. அவர்களுக்குள் தப்பான உறவிருந்தால் அதை எப்படித் தாங்கிப்பேன். என் ப்ரவீன் எனக்கு துரோகம் செய்வாரா? மீண்டும் மீண்டும் குழம்பினாள்.

‘‘என்னம்மா குழப்பம்? சீனுவோட சாக்ஸை ஸ்வேதாவுக்குப் போட்டு விடறே?’’ என்று கேட்டாள் கமலம்.

ரமணி அவளை நிமிர்ந்து ஏக்கத்துடன் பார்த்தாள். அழ வேண்டும் போலிருந்தது. நான் ஏன் அழணும். இப்போ என்ன நடந்துச்சு. ஒண்ணுமே இல்லாத விஷயத்தை நினைச்சு நான் ஏன் குழம்பி கவலைப்படணும்? சாயந்திரம் வந்து அத்தையிடம் மனம் விட்டுப் பேசணும். அப்போது தான் மனசு லேசாகும். தன்னைத் தானே சமாதானம் செய்து கொண்டாள் ரமணி.

''ரமணி சமையல்காரம்மா இன்னிக்கு வந்துருவாங்க. இனி உன் டென்ஷன் கொஞ்சம் குறையுமா?''

''ஆமா அத்தை!''

ப்ரவீனும் ஆபீசுக்கு கிளம்பி விட்டான். வண்டியின் சாவியை சுழற்றியபடி வந்தான்.

''ரமணி நான் கிளம்பறேன்!'' என்றவன், கமலத்தைப் பார்த்ததும் ''அம்மா நான் போயிட்டு வர்றேன்!'' என்றான்.

இருவரும் எதுவும் பேசாமல் அவனையே பார்த்தார்கள். ப்ரவீன் இருவரையும் மாறி மாறி பார்த்தான். என்ன, ஏதென்று கேட்பதற்கு நேரமில்லாததால் விருட்டென்று வண்டியை எடுத்துக் கொண்டு கிளம்பிப் போனான்.

''அத்தை நானும் கிளம்பறேன். வேன் வந்ததும் பசங்களை அனுப்பிடுங்க!''

''சரிமா!''

அலுவலகம் சென்றதும் இன்று நந்தினியிடம் பேசவே கூடாது என்று தீர்மானித்திருந்தாள் ரமணி. 'உன் பொட்டு எப்படி என் ப்ரவீன் ஷர்ட்டில் வந்தது' என்று விசாரிக்கணும் என நினைத்துக் கொண்டே ஆபீஸினுள் நுழைந்தவளுக்கு ஏமாற்றம்தான் மிஞ்சியது. நந்தினியை அவள் இருக்கையில் காணவில்லை. வேறெங்காவது இருக்கிறாளா என்று பார்வையை சுழல விட்டாள்.

''இப்படியொரு ப்ரெண்ட் ஷிப்பை நான் பார்த்ததே இல்லை மேடம்!''



குரல் கேட்டு திரும்பி பார்த்தாள் ரமணி. ப்யூன் நின்றுக் கொண்டிருந்தான்.

''ஆபீசில் காலடி எடுத்து வைத்ததுமே நந்தினி மேடத்தை இவ்வளவு ஆர்வமா தேடறீங்க. குழந்தை குட்டினு ஆன பிறகு கூட ப்ரெண்ட்ஷிப்புக்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறீங்க.. யூ ஆர் ரியலி கிரேட் மேடம்!''

ரமணி அமைதியாய் இருந்தாள்.

''மேடம்.. உங்களுக்கு ஏதாவது..?''

''நோ.. நோ.. ஐயம் ஆல்ரைட்!''

''உங்க ப்ரெண்ட்டுக்குத்தான் பாவம். உடம்புக்கு முடியலை. ஆபீசுக்கு வந்ததிலிருந்து வாந்தியா எடுத்தாங்க. இப்போதான் பக்கத்திலிருக்கிற ஹாஸ்பிடலுக்கு போனாங்க!''

ரமணிக்கு பக்கென்றது. யோசனையுடன் தனது கேபினுக்குச் சென்றாள்.

நந்தினி வாந்தி எடுத்தாளா? நேத்து கூட மயக்கமா இருக்கு என்றாளே.. அப்படியென்றால்? ரமணிக்கு நினைக்க நினைக்க படபடப்பு அதிகமானது. தலையே பிளந்து விடும் போலிருந்தது. மேஜை மீதிருந்த போனை எடுத்து ப்ரவீனின் அலுவலகத்து எண்ணை அழுத்தி 'ப்ரவீன் இருக்காரா?'' என்று விசாரித்தாள்.

''மேடம் உங்க ஹஸ்பெண்ட் ஆபீஸ் வந்ததுமே அரை நாள் பர்மிஷன் போட்டுட்டு வெளியே போயிருக்கார்'' என்று பதில் வந்தது.

''எ.. எங்க போயிருக்காருன்னு தெரியுமா?''

'எதுவும் சொல்லலை மேடம்!''

''தேங்க்யூ'' என்று ரிஸீவரை சாத்தினாள். பின் வேகமாக ப்ரவீனின் செல்லுக்கு ட்ரை பண்ணினாள். அதிர்ந்து போனாள். ப்ரவீன் செல்லை ஆப் பண்ணி வைத்திருந்தான். விஷயத்தின் விபரீதம் பாதி புரிந்தது. அவளின் அன்றைய தினத்தின் வேலைகளை அவளுக்கு கீழிருந்த ஸ்டாப்பிடம் ஒப்படைத்து விட்டு வேக வேகமாக ஸ்கூட்டியை எடுத்துக் கொண்டு அருகிலிருந்த கிளினிக்கிற்கு விரைந்தாள்.

மருத்துவமனையின் முன்பு வண்டியை நிறுத்தி விட்டு உள்ளே சென்றாள். அந்த பக்கம் வந்த நர்ஸிடம்,

''நர்ஸ்.. இப்போ நந்தினினு ஒரு பேஷண்ட் வந்தாங்களா?'' என்று விசாரித்தாள்.

''டாக்டரிடம் கேளுங்க'' என்று அந்த நர்ஸ் நகர்ந்து விட்டாள்.

ரமணி டாக்டரின் அறைக்கு சென்றாள். லேடி டாக்டர் ரமணியைக் கண்டதும் பேஷண்ட் என நினைத்து ''வாங்க.. உட்காருங்க.. உடம்புக்கு என்ன?'' என்று அக்கறையுடன் விசாரிக்கத் தொடங்கினாள்.

ரமணி கர்ச்சீப்பால் நெற்றியில் வழிந்த வியர்வையைத் துடைத்தபடி சொன்னாள்.



''டாக்டர், நான் பேஷண்ட் இல்லை. எனக்கு ஒரு விஷயம் தெரிஞ்சுக்கணும்... எனக்கு கொஞ்சம் ஹெல்ப் பண்ண முடியுமா?''

''சொல்லுங்க?''

''கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி இங்கே நந்தினின்னு ஒரு பேஷண்ட் வந்தாங்களா? இரண்டு நாளா ஆபீஸ் பக்கம் பார்க்க முடியலை. அதான் அவ உடம்புக்கு என்னன்னு தெரிஞ்சுக்கலாம்னு..''

''நந்தினி என்னுடைய பேஷண்ட்தான்.. அவளைப் பத்தி விசாரிக்கீங்களே நீங்க யார்?''

''அவளுடைய தோழி ரமணி. அவ உடம்புக்குப் பயப்படுகிற மாதிரி எதுவும் இல்லியே டாக்டர்.''

டாக்டர் புன்னகைத்தார்.

''பயப்படுகிற விஷயமா இது? சந்தோஷப்படக் கூடிய விஷயமாச்சே, நந்தினி இஸ் த்ரீ மந்த்ஸ் ப்ரெக்னெனட்!''

ரமணிக்கு தூக்கி வாரிப் போட்டது. உலர்ந்த உதடுகளை பிரித்து கேட்டாள்.

''இப்போ எங்கே?''

''அவளும் அவ ஹஸ்பெண்ட்டும் பாலாஜி லாட்ஜில் ரூம் எடுத்து தங்கப் போவதாகப் பேசிக்கிட்டாங்க.''

''நீங்க கொடுத்த டீட்டெயில்லுக்கு ரொம்ப நன்றி டாக்டர்!'' என்று கூறிவிட்டு பத்து நிமிடம் செலவழித்து

பாலாஜி லாட்ஜுக்கு வந்தாள். அரக்கப் பரக்க ரிசப்ஷனில் விசாரித்து நந்தினி தங்கியிருந்த அறைக்குச் சென்றாள்.

மனசு தொடர்ந்து படபடவென்று அடித்துக் கொண்டிருந்தது. உடல் முழுவதும் திகில் பரவ, வியர்த்து ஊற்றியது அவளுக்கு. வியர்வையால் தொப்பலாய் நனைந்தபடி அறையின் கதவினருகே சிறிது நேரம் நின்றிருந்தாள். பின் கைகள் நடுங்க கதவைத் திறந்தவள், அப்படியே உறைந்து போனாள். நந்தினி ப்ரவீனின் தோளில் சாய்ந்திருந்தாள். பூமி காலை விட்டு நழுவுகிற மாதிரி இருந்தது. லேசாய் மயக்கம் வந்து சரியப் போனவள், சுதாரித்துக் கொண்டு சுவற்றை இறுக பற்றிக் கொண்டாள்.

''என்னிக்கு அவ ப்ரவீனையும் உபயோகப்படுத்திக்கப் போறாளோ?'' மாமியாரின் வார்த்தைகள் மீண்டும் மீண்டும் காதில் ஒலித்தன.

எரிமலையாய் அவர்கள் முன்பு போய் நின்றாள் ரமணி. ப்ரவீனும் நந்தினியும், ரமணியை அந்த இடத்தில் சற்றும் எதிர்பார்க்கவில்லை. விக்கித்துப் போய் எழுந்து நின்றார்கள். நந்தனியை எரித்து விடுகிற மாதிரி பார்த்தாள். ஆவேசத்துடன் அவளது தோளைப் பற்றி உலுக்கத் தொடங்கினாள்.

''உன்னுடைய கர்ப்பத்துக்கு யார் காரணம்? சொல்லுடி, யார் காரணம்?''

''ஏய் சும்மா கத்தாதே. உன்னுடைய புருஷன்தான் காரணம்!''



நந்தினி சர்வ சாதாரணமாய் சொன்னாள். ரமணிக்கு விஷயம் தெரிந்து விட்டதே என்ற பயம் துளி கூட அவளிடம் தென்படவில்லை.

நந்தினி செய்த துரோகத்தை பொறுக்க மாட்டாமல் அவள் கன்னத்தில் ஓங்கி ஒரு அறைவிட்டாள் ரமணி.

''துரோகி, நீயெல்லாம் ஒரு தோழியா? அநியாயமா என் கணவரை மயக்கி வெச்சிருக்கியே?''

''நாம இரண்டு பேரும் எதுவாக இருந்தாலும் பகிர்ந்துப்போமே.. அதுமாதிரிதான் இதுவும்'' என்றாள் நந்தினி கூலாக.

''தூ.. இப்படி பேச உனக்கு வாய் கூசலை. தோழியோட புருஷன் கிட்டே நெருங்கி பழகியிருக்கே. உனக்கு மனசாட்சி உறுத்தலை. ஆங்.. உனக்கு மனசென்று ஒன்று இருந்தால் தானே மனசாட்சி உறுத்தறதுக்கு.. உன்கிட்டே எனக்கென்னடி பேச்சு!''

கண்ணீர் விழிகளுடன் ப்ரவீனைப் பார்த்தாள்.

''உங்களை முழுசா நம்பித்தானே இவளை வீட்டுக்கு கூட்டிட்டு வந்து எல்லோர் கூடவும் பழகவிட்டேன். எப்படிடா எனக்கு துரோகம் செய்ய மனசு வந்தது. துரோகி! இரண்டு பேரும் எனக்கு பண்ணின துரோகத்திற்கு ந.. நல்லா இருக்க மாட்டீங்க!''

ரமணிக்கு அழுகை வெடித்தது. ப்ரவீன் பதட்டத்துடன் வந்த வியர்வையை துடைத்துக் கொண்டான். நந்தினி அவனுக்கு தைரியம் கொடுத்தாள்.

''கவலைப்படாதீங்க ப்ரவீன்... அவளுக்கு மனசுல பத்தினினு நினைப்பு.. அவ சாபம் எல்லாம் பலிக்காது!''

''நீ பேசாதடி.. உன் கூட பேசறதே பாவம்!''

ரமணி கண்ணீரைத் துடைத்துக் கொண்டு ப்ரவீனிடம் வந்தாள்.

''என்னங்க இவ நல்லவ இல்லீங்க.. இவ நமக்கு வேண்டாங்க.. நம்ம பசங்களுக்கு இந்த விஷயமெல்லாம் தெரிஞ்சா என்னாகும்னு நினைச்சுப் பாருங்க. உங்களைப் பத்தி தப்பான எண்ணம் வரும். அதெல்லாம் நமக்கு வேண்டாங்க. இந்த சனியனை இங்கேயே தலைமுழுகிட்டு என்னோட வாங்க!''

ப்ரவீனின் கையைப் பற்றி ஏக்கமாக இழுத்தாள். ஆனால் ப்ரவீன் அவளது கையை உதறிவிட்டு முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டான். ரமணி மீண்டும் கெஞ்சினாள்.

''என்னங்க நான் உங்களுக்கு வேண்டாமா? நம்ம குழந்தைங்க.. உங்க அம்மா உங்களுக்கு வேண்டாமா? ஏங்க இப்படி நடந்துக்கிறீங்க..? வாங்க.. வாங்க.. நம்ம வீட்டுக்குப் போகலாம்!''

ஆனால் ப்ரவீன் ரமணியின் கையை உதறி விட்டு நந்தினியின் முதுகுக்குப் பின்னால் போய் நின்று கொண்டான். நந்தினி ரமணியைப் பார்த்து கேலியாய் நகைத்தாள்.



ரமணி கண்ணீரை அழுத்தி துடைத்தாள். தீர்க்கமாய் ப்ரவீனை பார்த்து சொன்னாள்.

''நீங்க பண்ணின தப்பை பெரிசுபடுத்தாமல் மன்னிச்சு உங்களை அழைத்தேன். ஆனா நீங்க என்னை உதாசீனப்படுத்திட்டீங்க. நானும் மனுஷிதான். எனக்கும் தன்மானம் இருக்கு. நீங்க பண்ணின தப்பை உணர்ந்து என்னை தேடி வரும் நாள் வெகு தொலைவில் இல்லை. அப்போது நான் பட்ட வேதனையை நீங்களும் உணருவீங்க.''

''ஏய்.. போடீ சரிதான்.''

ப்ரவீன் படாரென்று சொன்னான்.

ரமணி திடுக்கிட்டுப் போய் நிமிர்ந்து அவனையேப் பார்த்தாள். ப்ரவீனா இது? என்னுடைய ப்ரவீனா இது? என் மேல் பிரியமாய் பாசமாய் இருந்தானே அவனா இப்படி? நான் அவனுக்கு என்ன குறை வைத்தேன்.. என்னிடம் இல்லாததை நந்தினியிடம் என்னத்தைக் கண்டான்? மாடு வேலியை பிச்சுக்கிட்டு போயாச்சு. இனிமேல் இழுத்துப் புடிச்சு கட்டி போட முடியாது. தானாக திருந்தி வந்தால்தான் ஆச்சு.

ரமணியால் ப்ரவீனை வெறுக்க முடியவில்லை. ரமணியின் மீதும், குழந்தைகளின் மீதும் பாசத்தை பொழிந்தவனாயிற்றே!

நந்தினியின் மேல் தான் கோபம் கோபமாக வந்தது. அவள் மேல் கோபப்பட்டும் என்ன பிரயாஜனம்? நான்தானே அவளுக்கு இந்த அளவுக்கு இடம் கொடுத்

தேன். ஆரம்பத்திலேயே அவளை இருக்க வேண்டிய இடத்தில் வைத்திருக்க வேண்டும். இப்போ வேதனைப் பட்டு என்ன பிரயோஜனம்?

ரமணிக்கு ஏதேதோ பேசத் தோன்றியது. தன் இதயத்தை திறந்து காட்டும் உத்வேகம் வந்தது. ப்ரவீனின் அலட்சியமும், நந்தினியின் கேலியான பார்வையும் மனதை அறுத்தது. ரமணி மெல்லத் திரும்பிவிட்டு தூர தூர போக விரும்புகிறவள் மாதிரி வேகமாக நடக்கத் தொடங்கினாள்.

## 4

தளர்ந்து போய் வந்திருந்த ரமணியைக் கண்டதும் கமலத்திற்கு ஒன்றும் புரிய வில்லை. 'என்ன நடந்தது? ஏன் இப்படி வந்திருக்காள்!' என்ற யோசனையுடன் அவளருகில் சென்று அமர்ந்தாள். ஸ்வேதாவும், சீனுவும் ஓடி வந்து அவளது கழுத்தைக் கட்டிக் கொண்டார்கள்.

''ரமணி ஏம்மா ஒரு மாதிரியாயிருக்கே?''

''மம்மீ.. நீங்க வந்துட்டீங்க டாடி எப்போ வருவாங்க?'' எனக் கேட்டாள் ஸ்வேதா.

''டாடி.. டாடி இனிமேல் வர மாட்டார்!'' என்று அவள் உதடுகள் மெதுவாக முணுமுணுத்தன. ரமணிக்கு அழுகை பொங்கியது. முகத்தை இரு கைகளாலும் பொத்திக் கொண்டு ஓவென கதறி அழத் தொடங்கினாள்.



விஷயம் விபரீதம் ஆகிவிட்டதை உணர்ந்தாள் கமலம். அதிர்ச்சியடையவில்லை. கோபம்தான் வந்தது.

''அழு, நல்லா அழு. இப்போ கண்ணீர் சிந்தி என்ன பிரயோஜனம்? நான்தான் தலைபாடா அடிச்சுக்கிட்டேனே. நந்தினி சரியில்லைன்னு. எங்கே காது கொடுத்து கேட்டே? ஆரம்பத்துலேயே கவனமாக இருந்திருந்தால் இந்நேரம் எந்த பிரச்சினையும் வந்திருக்காதே. ப்ரவீன் உன்னை விட்டு போனதற்கு நீதானே காரணம். உன் தப்பை உணர்ந்து அழு.. நல்லா அழு...''

ரமணி வீங்கின முகத்துடன், சிவந்த கண்களுமாய், தன் மாமியாரை நிமிர்ந்து பார்த்தாள். கமலம் உடனே சற்று சுதாரித்து, கொந்தளித்து வந்த கோபத்தை எல்லாம் கட்டுப்படுத்தி இந்நேரம் அவளுக்கு ஆறுதலும் அரவணைப்பும்தான் முக்கியம் என்று எண்ணி அவளது கண்ணீரை துடைத்து விட்டு தலையை வருடி விட்டாள்.

''அழாதே ரமணி.. எல்லாம் விதி.''

''அத்தை அவர் நந்தினி கூடவே போயிட்டார். என்னோட அன்பைப் புரிஞ்சுக்காமலே போய்விட்டாரே! அதுதான் வேதனையா இருக்கு. அவர் இல்லாத வாழ்க்கையை என்னால நினைச்சுக் கூடப் பார்க்க முடியலை! இனிமேல் நானும் பிள்ளைகளும் என்ன செய்வோம்? எங்களுக்கு யார் இருக்காங்க! அ.. அத்தை ஒருவேளை அவர் உங்களை வந்து கூப்பிட்டால் நீங்களும் என்னை விட்டுட்டுப் போயிடுவீங்களா? என்னை விட்டு போயிடாதீங்க அத்தை!''

குழந்தையைப் போல் மருண்ட விழிகளுடன் கெஞ்சினாள். கமலத்திற்கு அவள் நிலைமையைப் பார்ப்பதற்கே பரிதாபமாய் இருந்தது. அவளது கண்களும் பனித்தன.

''கவலைப்படாதே ரமணி.. என்னிக்கும் நான் உன்னை விட்டுப் போக மாட்டேன். இது உறுதி. நான்தான் ஆரம்பத்துலேயே சொன்னேனே. கணவன் செய்கிற நல்லதுக்கும் கெட்டதுக்கும் பொண்டாட்டிக்கும் பாதி பங்கு உண்டுன்னு!''

''இப்போ என்னத்தை பண்றது? நந்தினி வேறு கர்ப்பமாக இருக்கிறாள்!''

''தூ!''

கமலம் அவளையும் மீறி அருவருப்பாய் காறி துப்பினாள்.

''நான் இப்பவே போய் என் பிள்ளையைக் கூட்டிட்டு வர்றேன்!'' கமலம் வேகமாக எழுந்தாள்.

''நானும் உங்களோடு வர்றேன் அத்தை.''

''வேண்டாம்மா.. உன்னைப் பார்த்தால் ப்ரவீன் ஆத்திரப்படுவான். நான் போய் கூப்பிட்டா வந்துடுவான்.. அவனை கையோடு கூட்டிட்டு வந்துடறேன்.''

கமலம் உடனே புறப்பட்டு விட்டாள். ரமணி கொடுத்த விலாசத்தை எடுத்துக் கொண்டு ப்ரவீனும், நந்தினியும் தங்கியிருந்த அறையை கண்டுபிடித்து சென்றாள்.



கமலத்தைக் கண்டதும் ப்ரவீன் திடுக்கிட்டான்.

''அம்மா.. நீங்க எதுக்கு இங்கே வந்தீங்க?''

''ம்.. உங்க இரண்டு பேருக்கும் கல்யாணம் பண்ணி வைச்சு சீமந்தம் பண்ணத்தான். தூ.. நாய்களே.. எனக்கு வர்ற ஆத்திரத்துக்கு உங்க இரண்டு பேரையும் கண்டம் துண்டமாக வெட்டி போட்டுடுவேன். கிளம்புடா ராஸ்கல்!'' என்று ப்ரவீனின் கையைப் பற்றி இழுத்துக் கொண்டு கிளம்ப போனாள்.

நந்தினி வேகமாக வந்து கமலத்தைத் தடுத்தாள்.

''அத்தை., அவரை விடுங்க.. அவரை எதுக்கு இப்போ கூட்டிட்டு போறீங்க?''

''அத்தையா? யாருடி உனக்கு அத்தை. வாயை மூடுடி. எத்தனை ஜென்மமானாலும் ரமணிதான் என் மருமக. வழியை விடுடி!''

''விடமாட்டேன்... என் ப்ரவீனை என்கிட்டே இருந்து பிரிச்சுடாதீங்க!''

''ப்ரவீன் என் மகன்.. என் பேச்சைத்தான் கேட்பான். அவனை வீட்டுக்கு கூட்டிட்டுப் போய் நல்லா வேப்பிலை அடிச்சு இனிமேல் எந்த நாய்கிட்டேயும் சகவாசம் வெச்சுக்காதேனு சொல்லணும்.''

அவ்வளவுதான் 'நாய்' என்ற வார்த்தையைக் கேட்டதும் நந்தினி ஆவேசமானாள். ''நாயா? யாரை பார்த்து நாயினு சொன்னே.. உன்னை..''

ஆவேசத்துடன் கமலத்தை கழுத்தை பிடித்து வெளியே தள்ளி கதவை டமாரென்று அறைந்தாள்.

கமலம் வெளியே வந்து விழுந்தாள். துடிதுடித்து போனாள். உடலெல்லாம் நடுங்கியது. கண்கள் கிறுகிறுத்தன. மூச்சு முட்ட இரண்டு கைகளை ஊன்றி மெதுவாக எழுந்து உட்கார்ந்தாள்.

அவமானமாக இருந்தது. அழுகை முட்டிக் கொண்டு வந்தது. தளர்ந்து போய் வீடு நோக்கி நடக்கலானாள்.

★ ★ ★

கமலத்தை கண்டதும் ரமணி வேகமாக எழுந்து வந்தாள்.

''அத்தை அவர் எங்கே? நந்தினியை விட்டுட்டு அவர் வர்றேன்னு சொன்னாரா?''

கமலம் எதுவும் பேசாமல் சோபாவில் தொப்பென்று அமர்ந்தாள். ரமணி அவளருகில் அமர்ந்து அவளது தோளைத் தொட்டு கேட்டாள்.

''அத்தை என்னாச்சு? ஏன் ஒண்ணுமே பேச மாட்டேங்கிறீங்க?''

''என்னை மன்னிச்சிரும்மா.. என் பிள்ளையை நான் சரியா வளர்க்கலையோன்னு தோணுது. வேறொருத்தியிடம் மயங்கி உன்னை இப்படி அம்போனு விட்டுட்டு போவான்னு நான் நினைச்சு கூட பார்க்கலை!''

''அவர் என்னதான் சொன்னார்?''



''அவன் எங்கே பேசினான். சேர்த்து வெச்சு அந்த கேடு கெட்டவ தானே பேசினா... பேச மட்டுமா செஞ்சா.. என்னை.. என்னை..''

கமலத்தினால் அதற்கு மேல் பேச முடியவில்லை. விம்மி விம்மி அழத் தொடங்கினாள்.

ரமணி படபடப்புடன் கேட்டாள்.

''உங்களை என்னத்தை பண்ணினாள்?''

''என்னை கழுத்தை பிடிச்சு வெளியே தள்ளிட்டா. என்னால அந்த அவமானத்தை தாங்க முடியலைம்மா.. தாங்க முடியலை.. நடந்த எல்லாத்தையும் பார்த்துக்கிட்டு என் மகன் வாயே திறக்கலை.''

கதறி அழுதாள். ரமணி ஆடிப் போனாள்.

''அழாதீங்க அத்தை. அவங்க பண்ற தப்புக்கு என்னிக்காவது ஒரு நாள் தண்டனை அனுபவிப்பாங்க. நடந்ததையே நினைச்சு கவலைப்பட்டுக் கிட்டிருக்காம போய் படுத்து ரெஸ்ட் எடுங்க!''

கமலத்திற்கு சமாதானம் சொன்னாலும் ரமணி உள்ளுக்குள் குமுறினாள். அத்தை வயதில் பெரியவங்க. அவங்களையே நந்தினி கழுத்தை பிடிச்சு வெளியே தள்ளியிருக்கிறாள் என்றால் என்ன தைரியம்? ப்ரவீன் அந்தளவுக்கு இடம் கொடுத்திருக்கிறார். நடந்ததை வேடிக்கை பார்த்துக்கிட்டிருந்திருக்காரே... அத்தைக்கு ஏற்பட்ட அவமானம் மறக்கக் கூடியதா? இல்லை மன்னிக்கத்தான் கூடியதா? அதையே நினைத்து நினைத்து

அத்தை எத்தனை நாட்களுக்கு கஷ்டப்படப் போறாங்களோ?

மறுநாள்..

ரமணி சற்று தாமதமாகத்தான் எழுந்தாள். படுக்கையிலிருந்து எழும்போதே மனது கனத்தது. கண்கள் விண் விண்ணென்று வலித்தன. ப்ரவீன் இல்லாமல் வீடே வெறிச்சோடிக் கிடந்தது. ஸ்வேதாவும், சீனுவும் நன்றாக தூங்கிக் கொண்டிருந்தார்கள். ரமணிக்கு அவர்களை எழுப்ப மனம் வரவில்லை. தானும் அத்தையும் அழுததைப் பார்த்து இருவரும் மனம் சோர்ந்து போயிருப்பார்கள். இன்றைக்கு அவர்களை பள்ளிக்கு அனுப்ப வேண்டாம் என்று நினைத்துக் கொண்டாள். அவர்கள் எழுந்தவுடன் பீச் அல்லது பார்க் கூட்டிச் சென்று வந்தால் ஒரு மாறுதலாக இருக்கும் என்று நினைத்துக் கொண்டாள். பெட் ரூமிலிருந்து வெளியே வந்தவள் முகம் மாறிப் போனாள். வீடே இருட்டாக இருந்தது. அத்தை இன்னும் எழுந்திருக்க வில்லை? மணி ஏழரை ஆகப் போகுது.

கமலம் தினமும் காலையில் சீக்கிரம் எழுந்து விடுவாள். அறையின் விளக்குகளைப் போட்டு ஜன்னலைத் திறந்து வைப்பாள். காலையிலேயே குளித்து விட்டு வீடு முழுக்க சாம்பிராணி போட்டு விடுவாள். வீடே ரம்யமாக இருக்கும்.

கமலம் இவ்வளவு நேரமாகியும் தூங்குகிறாள் என்பதை ரமணியால் நம்ப முடியவில்லை. கமலத்தின் அறையை எட்டிப் பார்த்தாள். மின் விசிறி சுழலும் சத்தம் கேட்டது. உள்ளே சென்று ஜன்னல் கதவுகளைத் திறந்து வைத்தாள்.



ரமணியின் மனம் ஏனோ ஒரு வித அச்சத்தை அளித்தது. கமலத்தை நெருங்கினாள். எந்தவித சலனமும் இல்லாமல் ஒருக்களித்து படுத்திருந்தாள்.

''அ.. அத்தை!''

அவளருகே போய் தொட்டு எழுப்பிப் பார்த்தாள். கமலம் எழுந்திருக்கவில்லை. உடல் முழுவதும் சில்லென்றிருந்தது. விஷயம் என்ன வென்று ரமணிக்கு புரிந்து விட்டது.

''அத்தை..''

வீடே அதிரும்படி ரமணியின் அழுகை வெடித்தது. குழந்தைகள் இருவரும் அரண்டு போய் ஓடி வந்து, ரமணியிடம் ஒட்டிக் கொண்டனர். மலங்க மலங்க விழித்தபடி சுற்றும் முற்றும் பார்த்தார்கள். ஒன்றும் புரியவில்லை. ஸ்வேதா கேட்டாள்.

''அம்மா.. என்னாச்சும்மா?''

''பாட்டி நம்மளையெல்லாம் விட்டுட்டு போயிட்டாங்கடா... அத்தை.. நீங்களும் என்னை விட்டுட்டு போயிட்டீங்களா? இரண்டு குழந்தைகளையும் வெச்சுக்கட்டு நான் எப்படி தனியாக இருக்கப் போகிறேன்? ஏன் அத்தை என்னை விட்டுப் போனீங்க? என் வாழ்க்கையில் மட்டும் ஏன் அடுத்தடுத்து இடியாக விழுகிறது?

ரமணி கதறிக் கொண்டிருக்கையில் அழைப்பு மணி அழைத்தது. தொடர்ந்து ''சார்'' என்று வெளியே யாரோ அழைக்கும் குரல். ரமணி கண்ணீரைத் துடைத்துவிட்டு

வெளியே வந்து பார்த்தாள். டை அணிந்த நபர் ஒருவர் நின்று கொண்டிருந்தார். ரமணி அவரை ஏறிட்டாள்.

"யார் வேணும்?"

"ப்ரவீன் வீடு இதுதானே?"

"யெஸ்"

"ப்ரவீன் சார், வீட்டுப் பத்திரத்தை வைத்து கடன் வாங்கி இருந்தார். கடனை இன்னும் அடைக்கவில்லை. வீட்டை ஜப்தி செய்ய வந்திருக்கோம்மா.."

ரமணி அதிர்ந்துப் போனாள்.

"ஸா..ஸார்... என் மாமியார் காலையில இறந்துட்டாங்க. அவங்களுக்கு காரியம் எல்லாம் பண்ணனும். என்னால எப்படி உடனே வீட்டை காலி பண்ண முடியும்."

ரமணி விக்கி விக்கி அழுதாள். வந்திருந்த நபர் ரமணியையே பரிதாபமாகப் பார்த்தார்.

"மேடம் உங்களுக்கு இரண்டு நாள் டைம் தருகிறேன். அதற்குள் வீட்டை எப்படியாவது காலி பண்ணிடுங்க."

வந்தவர் கூறிவிட்டு கிளம்பி விட்டார்.

ரமணி விறுவிறுவென்று உள்ளே வந்தாள். வீட்டுப் பத்திரத்தை வைத்து கடன் வாங்குமளவுக்கு என்ன அவசியம் வந்தது?

ப்ரவீனின் அட்ரஸை காகிதத்தில் எழுதிக் கொண்டு கிளம்பினாள். முகவரியை விசாரித்து அவன் வீட்டை நேரில் கண்டதும் பிரமித்துப் போனாள்.



இவ்வளவு பெரிய ஆடம்பரமான பங்களாவை வாங்கத்தான் வீட்டு பத்திரத்தை அடகு வைத்தாரா? காலிங் பெல்லை அழுத்தினாள். ப்ரவீன் தான் வந்து கதவைத் திறந்தான். ரமணியைக் கண்டதும் லேசாய் திகைத்தபடி..

"இங்கே எதுக்கு வந்தே?" என்று வேண்டா வெறுப்புடன் கேட்டான்.

"உ.. உங்கம்மா இறந்துட்டாங்க."

ப்ரவீன் அதிர்ந்து போனான்.

"என்ன சொல்ற?"

"நந்தினி அத்தையை அவமானப்படுத்தியதால்.. அந்த அவமானம் தாங்காமல் இன்னிக்கு காலையில இறந்துட்டாங்க!"

"அம்மாவுக்கு வயசாயிடுச்சு அதான் இறந்துட்டாங்க. மத்தபடி நந்தினியை குறை சொல்லாதே. சரி நான் வர்றேன்!"

அவளுடன் கிளம்ப ஆயத்தமானவனை நந்தினியின் குரல் உள்ளிருந்து வந்து தடுத்து நிறுத்தியது.

"என்னங்க இன்னிக்கு நாம செக்கப்புக்குப் போகணும்.. மறந்துட்டீங்களா?"

உடனே ப்ரவீன் ரமணியைப் பார்த்துச் சொன்னான்.

"நான் நந்தினியைக் கூட்டிக்கிட்டு டாக்டரிடம் செக்கப்புக்கு போகணும். என்னால வரமுடியாது!"

''என்ன பேசறீங்க நீங்க? கொஞ்சம் கூட நாக்கில் நரம்பில்லாமல். இறந்து போயிருப்பது உங்களை பத்து மாதம் சுமந்து பெத்தெடுத்த தாய். அவங்களுக்கு கொள்ளிப் போட வேண்டியது உங்க கடமை!''

''என்னால வர முடியாதுன்னு சொல்றேன்ல.. சும்மா வளவளனு பேசிக்கிட்டிருக்காம இங்கிருந்து போய்த் தொலை!''

கடுமையாக சொல்லிவிட்டு கதவை முகத்தில் அடித்தாற் போல் படாரென்று சாத்தினான். ரமணி அவமானம் தாங்காமல் துடித்துப் போனாள்.

பெற்ற தாயின் சாவை கேட்டு கூட இவன் மனம் கலங்கவில்லை. துடிக்கவில்லை. அந்த அளவுக்கு கல்லாகிப் போனானா? கல்லு கூட கரையுமே! இவன் காமம் என்ற பிசாசுக்குள் கரைந்து கொண்டிருக்கிறான்.

கணவன் இல்லாமல் பிள்ளைகளோடு தனித்து நின்று வாழ்க்கையில் வெற்றி பெற்று காண்பிக்கிறேன். ரமணி மனதுக்குள் சபதம் செய்து கொண்டாலும், எதிர்காலத்தைப் பற்றிய பயம் அவளின் ஒவ்வொரு நரம்பிலும் இருந்து கொண்டேயிருந்தது.

## 5

''மேடம்..''

பியூன் மெதுவாக அழைத்தான். கமலம் இறந்ததில் இருந்து ரமணிக்கு பெரும் உதவியாக இருந்தது பியூன் மோகன்தான்.



''மேடம்..'' மீண்டும் அவன் அழைத்தான்.

''ம்..''

''கவலைப்படாதீங்க.. உங்களுக்குத்தான் குவார்ட்டர்ஸ் உண்டே. நான் லாரியில் சாமான்களை கொண்டு வந்து குவார்ட்டர்ஸில் இறக்கிடறேன். நீங்க பின்னாடி பசங்களோடு ஆட்டோவில் வந்துடுங்க!'' என்றான்.

ரமணி சிவந்த விழிகளுடன் அவனை நிமிர்ந்து பார்த்து தலையை ஆட்டினாள்.

மோகன் எல்லா சாமான்களையும் குவார்ட்டர்ஸில் இறக்கி அவற்றை அந்தந்த இடத்தில் அழகாக வைத்து கொடுத்துவிட்டு ''நான் வர்றேன் மேடம்'' என்று கிளம்பினான்.

அன்று இரவு மணிக்கு தூக்கம் வரவில்லை. இடைமக்காமல் விட்டத்தையே வெறித்துக் கொண்டிருந்தாள். மனம் திக்திக்கென்று அடித்துக் கொண்டிருந்தது. கண்ணீர் கண்கள் ஓரமாய் விடாமல் வழிந்துக் கொண்டிருந்தது.

அப்பொழுது ரமணியின் மீது 'பொத்தென்று' ஏதோவென்று விழுந்தது. விருட்டென்று வாரி சுருட்டிக் கொண்டு எழுந்து உட்கார்ந்தாள்.

''எ..ன்.. னது?''

''ப.. பல்லியா என் மேல் விழுந்தது'' அவளது உடல் முழுவதும் கூசியது. பயத்தில் வெடவெடவென்று நடுங்கத் தொடங்கின. நாக்கு வறண்டு தொண்டை அடைத்து 'தண்ணி' கேட்டது. கட்டிலிலிருந்தபடியே கிச்சனை எட்டிப் பார்த்தாள். இருளோடி கிடந்தது. எழுந்து சென்று தண்ணீர் குடிக்க பயமாக இருந்தது. கட்டிலின் எதிரே சுவற்றில் ரமணியின் 'அம்மா'வின் மாலையிட்ட

புகைப்படத்தை ப்யூன் மாட்டி விட்டு சென்றிருந்தான். ரமணி அந்தப் படத்தைப் பார்த்து அழத் தொடங்கினாள்.

திடீரென்று அந்த புகைப்படத்தின் நடுவே வெள்ளை நிறத்தில் பிம்பம் ஆடுவது போலிருந்தது. ரமணி அதையே உற்று நோக்கினாள்.

''ரமணி அழாதே! பிரச்சினையின் தீர்வு சாவு கிடையாது. உன் உயிரையும் குழந்தைகளின் உயிரையும் பறிக்கும் உரிமை உனக்கு கிடையாது. பிரச்சினையை எதிர்த்து போராடி ஜெயித்து காண்பிக்கணும். உன் அப்பா இறந்த பிறகு நானும் உன்னை மாதிரி உடைந்து போயிருந்தால் உன்னை இந்தளவுக்கு படிக்க வெச்சு ஆளாக்கியிருக்க முடியுமா?

உன் கையில் படிப்பு இருக்கிறது. இதைவிட உனக்கு வேறென்ன துணை வேண்டும்? எத்தனையோ பெண்கள் கல்யாணமே பண்ணிக் கொள்ளாமல் வாழ்நாள் முழுவதும் தனித்து வாழ்ந்து ஜெயித்து காண்பிக்கவில்லையா? ஆண் துணை இல்லாமல் வாழ்வது கடினம் என்ற எண்ணத்தை தூக்கி எறி. வேரில்லாத மரமா? உன் சொந்தக் காலில் நிற்பதுதான் உனக்கு பெருமை! நடத்தை சரியில்லாத கணவனுடன் குடும்பம் நடத்துவதை விட தனியாக இருப்பது மேல்.

உலகில் நேசிப்பதற்கென்று எவ்வளவோ விஷயங்கள் இருக்கிறது... நல்லதை நேசி.. உயிர் உள்ள வரை போராடு! வெற்றி நிச்சயம்!''

அம்மாவின் அசரீரி குரலைக் கேட்ட ரமணிக்குள் ஒரு உத்வேகம் பிறந்தது. வேகமாக ஓடிப்போய் தன் அம்மாவின் புகைப்படத்தை எடுத்து மார்போடு இறுக அணைத்துக் கொண்டாள். உடலெங்கும் புதிய அதிர்வலைகள் ஓடத்



தொடங்கி, அன்றுதான் புதிதாக பிறந்தது போல், மனம் தெளிந்திருந்தது.

''அழமாட்டேன்.. இனிமேல் நான் அழவே மாட்டேன்மா..''

அவளது உதடுகள் தெம்பாக முணுமுணுத்தன. விளக்கை போடப் போனாள். அதற்கு அவசியமே இல்லாதவாறு கிழக்கே சூரியன் சிவப்பும் மஞ்சளும் கலந்த நிறமுடன் பெரிய பந்தாக உதயமாகி வெளிச்சத்தை வீட்டினுள் கக்கிக் கொண்டிருந்தான்.

''கவலைப்படாதே நந்தினி. நடந்தது நடந்து போச்சு.''

ஹாலில் சோபாவில் அமர்ந்திருந்த நந்தினிக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தான் ப்ரவீன்.

''எல்லாம் ரமணியால்தான்'' என்று ரமணியின் மீது குற்றம் சாட்டினாள் நந்தினி.

''இப்போ எதுக்கு அவளை இழுக்கறே?''

''இல்லியா பின்னே. அவ வந்து உங்களைக் கூட்டிட்டுப் போக நினைச்சா.. அந்த டென்ஷனோடு நாம டாக்டரிடம் போகும்போது நீங்க பைக்கை வேகமாக ஓட்டியதால்தான் இப்போ கரு கலைஞ்சிடுச்சு.. எல்லாம் அந்த ரமணியால் தான், அவளை..''

நந்தினி நறநறவென்று பல்லைக் கடித்தாள்.

''முதல் குழந்தை இப்படி ஆயிடுச்சேனு நினைக்கும் போது ரொம்ப கவலையாயிருக்கு நந்தினி!''

''விடுங்க ப்ரவீன்.. எல்லாம் அந்த ரமணியால்தான்!''

''நீ அபார்ஷன் ஆனதை நினைச்சு கவலைப்படற மாதிரி தெரியலையே.. சும்மா ரமணியை கரிச்சு கொட்டிக்கிட்டு

இருக்கே ஏன்?'' என்ற ப்ரவீன் நந்தினியை பார்த்தான். அவள் கூலாக ரிமோட்டில் சேனலை மாற்றி டி.வி. பார்த்துக் கொண்டிருந்தாள்.

''ஒரு வாரமா கம்பெனி பக்கம் போகலை.. இன்னிக் காவது போகணும்.. நான் போயிட்டு வரட்டுமா?''

''போயிட்டு வாங்க ப்ரவீன்! உத்யோகம் புருஷ லட்சணம். என் புருஷன் கை நிறைய சம்பாதிக்கணும்.. நான் மகாராணி மாதிரி வாழணும். சரி இந்த மகாராஜா எப்போ என் கழுத்துல தாலி கட்டப் போறீங்களாம்?''

''இன்னிக்கே கட்டிடலாம்!''

நந்தினியின் முகத்தில் ஆயிரம் வாட்ஸ் உற்சாகம்.

''நிஜமாவா ப்ரவீன்.''

''யெஸ்.. ஆபீஸிலிருந்து வரும்போது 'தாலி' வாங்கிட்டு வர்றேன். நாளைக்கு கோவிலில் வெச்சு மாலை மாத்தி உன் கழுத்தில் தாலியை கட்டறேன்!''

நந்தினி துள்ளலோடு ப்ரவீனின் கழுத்தைக் கட்டிக் கொண்டாள். பின் மெதுவாகக் கேட்டாள்.

''அப்போ ரமணி!''

''டைவர்ஸ்தான்!''

''ரியலி! தேங்க்யூ ப்ரவீன். நம்ம கல்யாணத்தை நாளைக்கெல்லாம் தள்ளிப் போட வேண்டாம். இன்னிக்கே சாமி படத்துக்கு முன்னாடி வெச்சு, என் கழுத்தில் தாலியை கட்டிடுங்க.. எனக்கு அதுபோதும்!''

''சரி நான் கிளம்பறேன்!''

''சீக்கிரம் வந்துருங்க!''



வாசல் வரை சென்று அவனை வழியனுப்பி விட்டு வந்தாள்.

'நீண்ட நாட்களுக்குப் பிறகு கம்பெனிக்குச் செல் கிறோம்' என்று நினைத்துக் கொண்டே ப்ரவீன் பைக்கை கம்பெனியின் வாசலில் நிறுத்தினான். கம்பெனியின் முன்பு கூட்டமாக இருந்தது. மொத்த ஊழியர்களும் கம்பெனியின் வாசலில் கூடியிருந்தார்கள். ப்ரவீன் யோசனையுடன் பைக்கிலிருந்து இறங்கிப் போனான். பதட்டத்துடன் விசாரித்தான்.

''என்ன விஷயம்? ஏன் எல்லோரும் இங்கே நின்னுக்கிட்டு இருக்கீங்க?''

உடன் வேலை புரியும் சக ஊழியர் சொன்னார்.

''கம்பெனியை இழுத்து மூடிட்டாங்கடா!''

ப்ரவீன் அதிர்ந்தான்.

''என்னது கம்பெனியை மூடிட்டாங்களா?''

''ஆமாடா.. நஷ்டத்துல ஓடுதாம்.. வேலை வர்றது கிடையாதாம்... இன்னும் என்னென்னமோ காரணம் சொல்றாங்கடா..''

ப்ரவீன் அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை.

சோர்ந்து போய் வீடு திரும்பினான். நந்தினி சந்தோஷமாக வெளிப்பட்டாள். பட்டுப் புடவை, நகை அணிந்து இருந்தாள்.

''வந்துட்டீங்களா? சீக்கிரம் போய் கை கால் கழுவிட்டு வாங்க. நல்ல நேரம் போயிடப் போகுது. தாலி எங்கே?''

ஆர்வத்துடன் அவனது பேக்கை வாங்கிப் பார்த்தாள்.

''ஓ.. நோ.. மறந்துட்டேன் நந்தினி!''

தன் தலையில் கைவைத்தபடி சொன்னான். நந்தினிக்கு கோபம் வந்தது.

''என்னது மறந்துட்டீங்களா? மறக்கக் கூடிய விஷயமா அது? எப்படி மறக்கும்ன்னு கேட்கிறேன்.. எதுல விளையாடறதுன்னு விவஸ்தை இல்லை!''

''கோபப்படாதே நந்தினி.. நான் சொல்றதை முதலில் கேளு!''

பின் அமைதியாகக் கேட்டாள். ''என்ன சொல்லப் போறீங்க?''

''எனக்கு வேலைப் போயிடுச்சு.. கம்பெனியை இழுத்து மூடிட்டாங்க. அந்த மன உளைச்சலில் வந்ததால் தாலி வாங்க மறந்துட்டேன்!''

நந்தினி அதிர்ந்து போனாள். நெஞ்சில் இடி இறங்கியது.

''என்னங்க சொல்றீங்க? வேலைப் போயிடுச்சா? ஏன்? இனிமேல் சாப்பாட்டுக்கு என்ன பண்றது?''

''வேற வேலை கிடைக்காமலா போயிடும்!''

''இப்போ எல்லா கம்பெனிகளிலும் பிரெஷ் கான்டிட் டேஸைதான் வேலைக்கு எடுக்கிறாங்க.. உங்களை மாதிரி ஆட்களுக்கு எப்படி வேலை கிடைக்கும்? கிடைச்சாலும் பழைய மாதிரி கை நிறைய சம்பளம் கிடைக்குமா? உங்க வீட்டை அடகு வெச்சு மேற்கொண்டு கந்து வட்டிக் காரரிடம் நிறைய பணம் வாங்கி எனக்காக இந்த பங்களாவை வாங்கிக் கொடுத்தீங்க. அந்தக் கடன் வேற இருக்கு. கடனை அடைக்க முடியலைன்னா இந்த வீட்டை விற்க வேண்டியதாயிடுமே!''

''இது மாதிரியெல்லாம் ஏன் யோசிக்கிறே? உன் வருமானம் இருக்கே.''



''என் வருமானத்தை வெச்சுக்கிட்டு இழுத்துக்கோ பறிச்சுக்கோன்னு எத்தனை நாளைக்கு இருக்கிறது?''

''நானே குழப்பத்தில் இருக்கேன். என்னை இன்னும் குழப்பாமல் இரு.''

சில நொடிகள் மவுனமாக இருந்தான். பின் 'சரி கிளம்பு'' என்றான்.

''எங்கே?'' என்றாள்.

''தாலி வாங்கத்தான்!''

நந்தினி ப்ரவீன் கைகளை தோளில் இருந்து விலக்கினாள்.

''நா.. நான் கொஞ்சம் யோசிக்கணும்.''

''இதுல யோசிக்கிறதுக்கு என்ன இருக்கு?''

''இ.. இல்லை, பணம் டைட்டாக இருப்பதால் தாலி செயின் எத்தனை சவரனில் வாங்குறதுனு யோசனையாக இருக்கு. தாலிக்கு இப்ப என்ன அவசரம் ப்ரவீன்... மெ.. மெதுவாக இன்னொரு நாள் பார்த்துக்கலாம்!'' என்றவளை அவன் இமைக்காமல் பார்த்தான்.

## 6

ரமணி புத்துணர்ச்சியுடன் அலுவலகத்துக் குள் நுழைந்தாள். அவள் நுழைந்ததும் தான் தாமதம் அலுவலக ஊழியர்கள் அவளை சூழ்ந்துக் கொண்டு கை குலுக்கி வாழ்த்துக் கூறி மகிழ்ந்தனர். ரமணி ஒன்றும் புரியாமல் திணறினாள்.

''கங்கிராட்ஸ்மா..''

குரல் கேட்டு திரும்பினாள். ஜி.எம். புன்னகையுடன் வந்தார்.

''இன்னையிலிருந்து இந்த ஆபீஸின் ஜி.எம். நிதான்மா, உன்னுடைய சின்சியாரிட்டிக்கு பலனாக இந்த புரமோஷன் கிடைச்சிருக்கு. எனக்கு டெல்லிக்கு மாற்றல் ஆகியிருக்கு!'' என்று வாழ்த்தினார்.

ரமணி சந்தோஷத்தில் திக்கு முக்காடிப் போனாள்.

''தேங்க்யூ சார்... தேங்க்யூ ஸோ மச்..'' என்று மகிழ்ச்சிப் பொங்க கூறினாள்.

ரமணிக்கு மனம் குதூகலமாகயிருந்தது. நாற்காலியை ஒரு சுழற்று சுழற்றி விட்டு அதில் உட்கார்ந்துக் கொண்டாள். தனக்காக கொடுக்கப்பட்ட வேலைகளை செய்யத் தொடங்கினாள்.

ரமணி சட்டென பி.ஏ.வுக்கு பட்டனைத் தட்டினாள்.

''எஸ்மேடம்!''

''நந்தினியை கொஞ்சம் வரச் சொல்லுங்க'' என்றாள்.

''மேடம், அவங்க ஒரு வாரம் லீவில் இருக்காங்க.. ஆனா இன்னைக்கு வந்து விடுவாங்க.''

ரமணி கூலாக 'ஐ.சி.' என்றவள் பின்பு, ''அவள் வந்ததும் என்னை வந்து பார்க்கச் சொல்லுங்க'' என்று ரிஸீவரை சாத்தினாள்.

நந்தினி தாமதமாக தான் அலுவலகத்துக்கு வந்தாள். அவள் வந்ததுமே பி.ஏ. அவளிடம் கூறினாள.

''மேடம், நீங்க வந்ததும் ஜி.எம். உடனே வந்து பார்க்கச் சொன்னாங்க!''

''அப்படியா?''



தனது ஹேண்ட் பேக்கை மேஜையின் மீது வைத்து விட்டு ஜி.எம்.மின் அறையை நோக்கி போகும் போது ரமணியின் கேபின் காலியாக இருப்பதைப் பார்த்தாள். உதட்டோரத்தில் சிரித்துக் கொண்டு 'இந்த நேரம் எந்த வீதியில் பிச்சைக்காரியாக சுத்திக்கிட்டிருக்காளோ' என நினைத்தபடியே ஜி.எம்.மின் அறைக்குள் சென்றாள்.

''எஸ் ஸார் கூப்பிட்டீங்களாமே!'' என்றாள்.

ரமணி நாற்காலியை சுழற்றி திரும்பி உட்கார்ந்து, கால் மேல் கால் போட்டு நந்தினியை அலட்சியமாய் நிமிர்ந்து பார்த்தாள். நந்தினி திடுக்கிட்டுப் போனாள்.

''நீ.. நீ.. எப்படி இந்த சீட்டில்?''

''நான் இந்த சீட்டில் உட்கார்ந்திருக்கிறேன் என்றால் என்ன அர்த்தம்? இன்னையிலிருந்து இந்த ஆபீஸின் ஜி.எம். நான்தான்! நீ வா.. போனு கூப்பிடறதுக்கு நான் ஒண்ணும் உன் வீட்டு வேலைக்காரி இல்லை, கால் மீ மேடம்!''

நந்தினி எச்சில் விழுங்கினாள். பயந்து போய், ''எஸ் மேடம்!'' என்றாள்.

''இந்தா உனக்கு டிஸ்மிஸ் ஆர்டர்!''

''காரணம்?''

ரமணி மேஜையின் மீதிருந்த பேப்பர் வெயிட்டை தூக்கிப் போட்டு பிடித்தாள்.

''காரணம்.. உன்னிடம் நல்ல ஒழுக்கம் கிடையாது. கண்ட நேரத்தில் வேலைக்கு வர்றது. இஷ்டத்துக்கு லீவு எடுக்கிறது. இதெல்லாம் எனக்குப் பிடிக்கலை.. நீ போகலாம்!''

''யூ... யூ.. என்னை பழி வாங்கறியா?''

''எப்படி வேணும்ன்னாலும் எடுத்துக்கோ.. உன்கிட்டே பேசிகிட்டிருக்க எனக்கு நேரமில்லை. கெட் அவுட்!''

நந்தினி விறைப்பாக வெளியேறினாள். வழி நெடுக ரமணியை திட்டிக் கொண்டே பஸ் ஸ்டாப் வந்து சேர்ந்தாள். மனம் அனலாய் கொதித்துக் கொண்டிருந்தது.

ப்ரவீனுக்கு போனை போட்டு அவனை வரச் சொல்ல நினைத்தாள். அவனை நினைக்கையில் கூட கொஞ்சம் வெறுப்பாக இருந்தது. வீட்டுக்கு சென்று அவன் முகத்தைப் பார்க்கவே எரிச்சலாக இருந்தது. வீட்டுக்கு போக பிடிக்காமல் வேற எங்கேயாவது போகலாம் என்ற யோசனையுடன் இருந்தவளின் முன்பு டாடா சபாரியில் சர்ரென்று வந்து இறங்கினான் சுரேஷ்.

சுரேஷைக் கண்டதும் நந்தினியின் முகத்தில் சந்தோஷ மின்னல் கீற்று.

''ஹாய் சுரேஷ்!'' என்றாள் உற்சாகமாய் அவளையும் அறியாமல்.

எப்பொழுதும் தன்னைக் கண்டதும் சுள்ளென்று விழும் நந்தினி இன்று தன்னைப் பார்த்து சிரித்தது சுரேஷுக்கு கொண்டாட்டமாக இருந்தது. அவனும் உற்சாகமாய்ப் பேசத் தொடங்கினான்.

''நந்தினி இங்கே ஏன் நிக்கிறே? எங்கே டிராப் பண்ணனும்னு சொல்லு. நான் உன்னை என் காரில் டிராப் பண்ணிடறேன்!''

''நானா? உங்க காரிலா?'' என்றாள் நாணத்துடன்.

''நோ ப்ராப்ளம்! கெட் இன்!'' என்று காரின் கதவைத் திறந்துவிட நந்தினி சந்தோஷமாக ஏறி அமர்ந்து கொண்டாள்.



ப்ரவீன் டி.வி.டி.யில் ஆங்கிலப் படம் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவன் நினைவை திசை திருப்பும் விதத்தில் அப்போது வெளியே ஹாரன் சத்தத்துடன் கார் வந்து நின்றது. ப்ரவீன், டி.வி.டி.யை ஆப் செய்து விட்டு எழுந்து போய் கதவைத் திறந்து பார்த்தான்.

வெளியே கண்ட காட்சியைப் பார்த்ததும் அவன் மின்சாரம் தாக்கியவன் போல் அதிர்ந்து போனான்.

நந்தினியும், சுரேஷும் மாலையும் கழுத்துமாய் கைகளைக் கோர்த்தபடி நின்றுக் கொண்டிருந்தனர். நந்தினி அலட்டிக்காமல் சொன்னாள்.

''ப்ரவீன், சுரேஷ் இன்னிக்கு ஈவ்னிங் ஸ்டேட்ஸ் போகப் போறார். அதனால எங்க கல்யாணம் அவசர அவசரமாக முடிந்துவிட்டது. ஸாரி உங்களைக் கூப்பிட முடியலை!''

''யூ..!''

ப்ரவீன் அவளை அறைவதற்கு கையை ஓங்கினான். சுரேஷ் சட்டென்று அவன் கையை இறுகப் பற்றித் தடுத்தான்.

''மிஸ்டர், நந்தினி இப்போ என்னுடைய மனைவி. அடுத்தவன் மனைவியைப் பார்த்து இப்படித்தான் நாகரீகமில்லாமல் கையை ஓங்குவதா?''

''தூ.. யாருடா உன்னுடைய மனைவி? இவ கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி என்னுடைய படுக்கையிலிருந்து எழுந்து போனவள்!''

''மிஸ்டர், என்னுடைய மனைவியின் நடத்தையைப் பற்றி பேசுவதற்கு உனக்கு உரிமை கிடையாது. எனக்கு உங்களுடைய பழைய கதை அவசியமில்லை. என் நந்தினி

இப்பவாவது என் காதலைப் புரிஞ்சிக்கிட்டாளே. அவ மனசு சுத்தமா இருக்கு. எனக்கு அது போதும்!'' என்றான் சுரேஷ்.

சுரேஷ் புதிதாக கட்டிய தாலி செயினை கை விரலால் நெருடியபடி நந்தினி சொன்னாள்.

''வழி விடுங்க.. என்னுடைய நகைகளை எடுத்துட்டுப் போகத்தான் வந்தேன்!'' என்று விறுவிறுவென பெட்ரூமை நோக்கிப் போனாள். ப்ரவீன் அவளைப் பின் தொடர்ந்தான்.

''நந்தினி என்னாச்சு உனக்கு? காலையில ஆபீஸ் போகும்போது நல்லாத்தானே இருந்தே. உனக்காக ரமணியையும், என் குழந்தைகளையும் உதறி விட்டு வந்தேன். அதற்கெல்லாம் நீ எனக்கு கொடுக்கிற பரிசு இதுதானா?''

''உன் அருமை பொண்டாட்டி இப்போ ஜி.எம். ஆயிட்டா. என்னை வேலையிலிருந்து தூக்கிட்டா.. உனக்கும் வேலை இல்லை. எனக்கும் வேலை இல்லை.. ரெண்டு பேரும் சேர்ந்து சோத்துக்குப் பிச்சை எடுக்கச் சொல்றியா?''

''உனக்கும், எனக்கும் வேலையில்லாததால் வசதியான இன்னொருத்தனைக் கல்யாணம் பண்ணிப்பியா? பொண்ணாடி நீ? பேய்... பிசாசு.. பணவெறி பிடிச்ச பிசாசு..''

''ஆமாடா, நான் பணப் பிசாசுதான். பணம் இல்லாட்டி நம்ம வீட்டு கூரையில கூட காக்கா உட்காராது. உன்னிடமிருந்த வசதிக்காகத்தான் உன்னையே சுத்தி சுத்தி வந்தேன். இப்போ நீ எதுக்கும் லாயக்கில்லாதவன். வேலைக்கு போகாமல் வீட்டில் தண்டமாக உட்கார்ந்திருக்கிற உன்னைக் கட்டிக்கிட்டு ஆயுசு முழுக்க கண்ணீர் சிந்த நான் தயாராயில்லை.. குட்பை!''



நந்தினியின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் ஈட்டியாய் ப்ரவீனின் மனதைக் கிழித்தது. அதிர்ந்து போய் தொப்பென உட்கார்ந்தான். நந்தினி அவளது நகைப் பெட்டியை எடுத்துக் கொண்டு சுரேஷுடன் கிளம்பிப் போய்விட்டாள்.

அவள் சென்ற கொஞ்ச நேரத்திலேயே அழைப்பு மணி அழைத்தது. ப்ரவீன் சோர்ந்து போய் எட்டிப் பார்த்தான்.

வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு அடர்ந்த மீசையுடன், தங்க சங்கிலி, தங்க மோதிரம், வாட்ச் சகிதமாக வழுக்கையைத் தடவியவாறு கந்துவட்டிக்காரன் நின்று கொண்டிருந்தான். அவன் நான்கைந்து ஆட்களை அழைத்துக் கொண்டு வந்திருந்தான். ப்ரவீன் அவர்களைக் கண்டதும் அதிர்ச்சியடைந்தான்.

''எ.. என்ன விஷயம் வீடு தேடி வந்திருக்கீங்க?''

இந்த பங்களாவை வாங்குவதற்கு மேற்கொண்டு பணத்தை என்னிடம் வந்து கேட்டே.. நானும் கொடுத்தேன். ஒழுங்கா வட்டியை கட்டினே.. இப்போ கொஞ்ச நாளா வட்டியும் காணோம்.. அசலையும் காணோம்... நான் கொடுத்த தேதியும் தாண்டிடுச்சு.. அசலை எப்போ திருப்பித் தரப் போறே..''

''வ.. வந்து நான் வேலை பார்த்த கம்பெனியை மூடிட்டாங்க. இப்போ வேலையில்லாம இருக்கேன். வேற வேலை தேடிகிட்டு இருக்கேன். அதனாலதான் கொஞ்ச நாளா உங்களை வந்து பார்க்க முடியலை.''

''என்னது வேலை போயிடுச்சா? உனக்கு என்னிக்கு வேற வேலை கிடைச்சு எப்போ என் பணத்தை வட்டியும் முதலுமா திருப்பித் தரப் போறே? வீட்டை விட்டு வெளியே போடா'' என்றான் கந்துவட்டிக்காரன்.

''யூ.. நான்தான் பணத்தை திருப்பித் தந்துடறேன்னு சொல்றேன்ல. என் வீட்டை விட்டு வெளியே போகச் சொல்றதுக்கு நீ யாருடா?''

''மொத்த பணத்தையும் திருப்பிக் கொடு, அதுக்கப்புறம் இந்த வீட்டை நாங்க விட்டு விடுகிறோம்!''

கந்துவட்டிக்காரன் கும்பலோடு வீட்டுக்குள் நுழைந் தான். ப்ரவீன் அவன் பின்னாடியே கெஞ்சியபடி வந்தான்.

''முதலில் பணத்தை வை, அதுக்கப்புறம் வந்து உன்னுடைய பொருளை அள்ளிட்டுப் போ!'' என்று கூறி ப்ரவீனை வெளியே தள்ளி கதவை டமாரென்று சாத்தினான்.

ப்ரவீன் நடு வீதியில் வந்து விழுந்தான். மனம் ரணமானது. 'சொற்ப நொடியில் எல்லாத்தையும் இழந்து விட்டு நடு வீதிக்கு வந்துட்டேன்.. எந்நிலையைப் பார்த்து அனுதாபப்பட ஆளில்லையா.. சட்டென்று மனம் ரமணியை நினைக்கத் தொடங்கியது. அவளது ஸ்பரிசத் திற்காக ஏங்கியது.

நடுரோட்டில் மண்டியிட்டுக் கதறி அழுதான்.

பின்னர் மனதை தேத்திக் கொண்டு ரமணியைச் சந்திக்க அவள் வீட்டிற்கு வந்தான். வாசற் கதவில் ரமணியின் பெயர் பித்தளை எழுத்துக்களால் பொறிக்கப்பட்டு ஜொலித்துக் கொண்டிருந்தது. பஸ்சரை அழுத்தினான். துளசிதான் வந்து கதவைத் திறந்தாள். ப்ரவீனை பார்த்ததும் ''யார் நீங்க?'' என்று விசாரித்தாள்.

''நா.. ரமணிக்குச் சொந்தம்... உள்ளே வரலாமா?'' என்று பாவமாகக் கேட்டான்.

''சொந்தம்னு சொல்றீங்க.. அட உள்ளே வாங்க சார்'' என்றாள் துளசி வாய் நிறையப் புன்னகையோடு. இந்தப்



பெண் யார் என்று யோசித்தபடியே ப்ரவீன் சென்று அமர்ந்தான்.

''கொஞ்சம் இருங்க சார்'' துளசி உள்ளே சென்றாள்.

ப்ரவீன் கண்களாலேயே வீட்டைச் சுற்றிப் பார்த்தான். தேவையான சாமான்கள் மட்டும் வைத்து ரமணி வீட்டை அழகாக வைத்திருந்தாள். டீபாய் மீது நியூஸ் பேப்பர் கிடந்தது. எதார்த்தமாக ப்ரவீனின் பார்வை பத்திரிகையின் முதல் பக்கத்தில் கொட்டை எழுத்தில் பொறிக்கப்பட்ட செய்தியின் மீது விழுந்தது. அமெரிக்கா சென்ற விமானம் நடுவானில் தீப்பிடித்து சிதறியது. அதில் உயிரிழந்தவர் களின் பெயர்கள் போடப்பட்டிருந்தன. அதில் ஐந்தாவதும், ஆறாவதுமாய் நந்தினி, சுரேஷ் என்றிருந்தது. அதைப் படித்த ப்ரவீன் லேசாய் அதிர, பின் நந்தினி ஆடிய ஆட்டத்துக்கு இது தண்டனை என்று நினைத்துக் கொண்டான்.

ஒரு கையில் பிஸ்கட்டும், சிப்ஸும் அடங்கிய பிளேட்டை ஏந்தி இன்னொரு கையில் காபியை ஏந்தியபடி வந்தாள் துளசி. அனைத்தையும் டீபாயின்மீது வைத்து விட்டு அவனை சாப்பிடச்சொன்னாள். ஆனால் ப்ரவீன் சாப்பிடவில்லை.

''நீங்க இங்கே வேலை செய்றீங்களா?'' எனக் கேட்டான்.

''ஆமா சார், நான் தான் இந்த வீட்டு வேலைக்காரம்மா... சமையல்காரம்மா எல்லாம். ரமணியம்மா ரொம்ப நல்ல வங்க. நான் புருஷனை இழந்த பிறகு என் பையனையும், பொண்ணையும் அவங்கதான் படிக்க வைக்கிறாங்க. எனக்கும் நல்ல சம்பளம் கொடுத்து உதவுறாங்க.''

ரமணியைப் பற்றி கண்களில் பெருமிதம் பொங்கச் சொன்னாள் துளசி. கொஞ்ச நேரத்திலேயே ரமணி

வந்துவிட்டாள். ப்ரவீனைக் கண்டதும் ஆச்சரியப்பட வில்லை. அவள் நேரே வந்து சோபாவில் உட்கார்ந்தாள். ரமணியைப் பார்த்ததும் ப்ரவீன் அவனையறியாமல் எழுந்து நின்றான். நேரடியாக விஷயத்துக்கு வந்தான்.

''ரமணி என்னை மன்னிச்சுடு... என் தப்பை உணர்ந்து திருந்தி வந்திருக்கேன்.. என்னை ஏத்துக்கோ'' என்றவனை அவள் நிமிர்ந்து நேராய் பார்த்தாள்.

''நான் எப்போதோ நீங்கள் செஞ்ச தப்பை மன்னிச்சு உங்களைக் கூப்பிட்டேன். ஆனா நீங்க என்னை உதறித் தள்ளிட்டீங்க. நான் இப்போ உங்களை ஏத்துக்கத் தயாராயில்லை. நீங்க போகலாம்!''

''ரமணியும் நீயும் குழந்தைகளும் எப்படி தனியா இருப்பீங்க. அதற்காகவாவது என் துணை உங்களுக்கு வேண்டாமா?''

''என் குழந்தைகள் ஓரளவு விவரம் தெரிந்தவர்கள். அப்பா இல்லாவிட்டாலும் அம்மா எப்படியோ கஷ்டப்பட்டு நம்மை காப்பாற்றுவாள் என்கிற நம்பிக்கையும், பாசமும் அவர்கள் நெஞ்சில் வேரூன்றி உள்ளது. இவர்களை விடவா எனக்கு ஒரு நல்ல துணை வேணும்னு நினைக்கிறீங்க?''

''கணவனே வேண்டாமென்று முடிவு பண்ணிட்டியா ரமணி?''

''நான் ஒண்ணும் அப்படி சொல்லலையே.. நம்பிக்கை துரோகம் பண்ணின கணவனுடன் குடும்பம் நடத்த நான் தயாராயில்லை. வெளியுலக பேச்சுக்காகப் பயந்து, கொஞ்சம் கூட பொறுப்பற்ற, கட்டுப்பாடில்லாத கணவனுடன் சேர்ந்து வாழ்ந்து குழந்தைகளை வளர்ப்பதை விட தன்னம்பிக்கையுடனும், துணிச்சலுடனும் தனித்து நின்று வளர்க்கிற என் செல்வங்கள் நாளைக்கு கண்டிப்பாய்



என் பேர் சொல்லும்படி வாழ்வாங்க. என் முடிவில் எந்த மாற்றமும் இல்லை!'' தீர்க்கமாய் சொன்னாள்.

இதற்கு மேல் அவளிடம் பேசி எந்த பலனும் இல்லை என்று நினைத்துக் கிளம்பி போனான். அந்நேரம் ஸ்வேதாவும், சீனுவும் பள்ளியிலிருந்து வந்தார்கள்.

ப்ரவீனைப் பார்த்ததும் ஸ்வேதா ரமணியின் பின்னால் போய் நின்றுக் கொண்டாள். சீனு மட்டும் ''ஹாய் டாடி'' என்று ஓடிச் சென்று ப்ரவீனின் காலைக் கட்டிக் கொண்டான். ப்ரவீன் சரேலென்று அவனைத் தூக்கிக் கொண்டான். ரமணி ஒரு கணம் மிரண்டு போனாள்.

''பயப்படாதே ரமணி! பிள்ளைகளை உன்னிடமிருந்து பிரிச்சுட மாட்டேன். இவர்கள் உன்னிடமே வளரட்டும். அப்போதான் நல்ல நிலைமைக்கு வருவாங்க!''

சீனுவின் நெற்றியில் மென்மையாய் முத்தமிட்டான். அவனை ரமணியின் மடி மீது உட்கார வைத்து விட்டுப் போய்விட்டான்.

சில நொடிகள் அங்கே பலத்த மௌனம் நிலவியது. ரமணி சொன்னாள். ''இரண்டு பேரும் போய் டிரஸ் சேஞ்ச் பண்ணிட்டு வாங்க.. வாக்கிங் போகலாம்!''

இருவரும் ரமணி சொன்னபடி தயாராகி வந்தார்கள். ரமணி ஸ்வேதாவின் கையையும், சீனுவின் கையையும் கோர்த்துக் கொண்டு நடக்கலானாள்.

அவளது முடிவை வாழ்த்துவது போல வானம் பன்னீர் தெளிக்க தெம்புடன் நிமிர்ந்து நடந்தாள். உலகம் விரிந்து கிடந்தது.